
விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 31 புதன்கிழமை (15.07.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 208





# இலங்கையில் சுனாமி அனர்த்தம்

# 22ஆம் திகதி ஏற்படும் வாய்ப்பு?

## 'நாசா' எச்சரிக்கை

(நியூயோர்க்)

இலங்கை,மலேசியா உட்பட பல நாடுகளில் எதிர் வரும் 22ஆம் திகதி சூரியகிரகணம் ஏற்படும்போது சுனாமி முதலான இயற்கை அனர்த்தங்கள் இடம் பெற வாய்ப்புள்ளதாக எண் கணித மேதை நம்புங்கள் நாராயணன் மற்றும் அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி ஆய்வுமைய விஞ்ஞானிகள் கணிப்பு வெளியிட்டுள்ளனர். (14ஆம் பக்கம் பார்க்க)



## சந்திரிகாவை எம்.பியாக்க மங்கள சமரவீர முயற்சி!



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை மீண்டும் நாடாளுமன்றத் திற்குக் கொண்டுவருவதற் கான முயற்சி ஒன்று எதி ரணிகளால் முடுக்கி விடப் பட்டிருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவுத் தலைவரான மங்கள சமரவீரவே இதற் கான முயற்சிகளின் பின்னணியில் உள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முக்கியமான தேர்தல்கள் எதிர்நோக்கப் படும் நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷவை எதிர் (14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கிழக்குத் தளபதிகள் வெளிநாட்டுக்கு தப்பியுள்ளனர்

### 'சந்தேசிய' கூறுகிறது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்திய இராணுவப் பொறுப்பாளர் கேணல் ராம் மற்றும் அரசியல்துறை பொறுப்பாளர் தயாமோகன் ஆகியோர் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றிருப்பதாக பி.பி.சியின் சிங்கள சேவையான சந்தேசிய தெரிவித்திருக்கின் றது.

வன்னியில் படையினர் மேற்கொண்ட தாக் குதல் நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய தலைவர்கள் பலர் கொல்லப்பட்டதையடுத்து, அம்பாறைக் காடுகளுக்குள் மறைந்திருந்த ராம், நகுலன் மற்றும் (14ஆம் பக்கம் பார்க்க)

## 2 இலட்சம் மக்களுக்கு சிகிச்சையளிக்க 50 மருத்துவர்களே கடமையில் உள்ளனர்

### வவுனியா முகாம் குறித்து கவலை

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் பகுதியில் அமைக் கப்பட்டுள்ள இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களில் உள்ள இரண்டரை இலட்சத்திற் கும் அதிகமான மக்களுக்கு சிகிச்சை அளிப் பதற்கு 50 மருத்துவர்கள் மட்டுமே இருப்ப தாகத் தெரிவித்துள்ள அரச மருத்துவ அதிகாரி கள் சங்கப் பேச்சாளர், மருத்துவத் தாதியர் களின் பணியைக் கூட இந்த மருத்துவர்களே செய்ய வேண்டியிருப்பதாகவும் சுட்டிக்காட்டி னார்.

இடம்பெயர்ந்த மக்களுக்காக என வட பகுதியில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் போதுமான மருத்துவ வசதிகளோ, தேவை யான அளவு மருத்துவப் பணியாளர்களோ இல்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வுக்கு (14ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் ஜெனரல் ஜகத் விபத்துக்குள்ளானார்

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் நேற்று முன் தினம் நள்ளிரவு விபத்துக்குள்ளாகி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பம்பலப்பிட்டி பொலிஸ் விளையாட்டரங் குக்கு அருகிலுள்ள வீதியில் இந்த விபத்து நேர்ந்துள்ளதுடன் அவர் தற்போது கொழு ம்பு தேசிய வைத்தியசாலையில் தீவிர சிகிச் சைப்பிரிவில் (14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண மின்சார சபை கணனிமயப்படுத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள மின்சார சபையின் பணிகள் நேற்று முதல் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் மின்சக்தி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே ஆகியோரால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

நேற்றுக்காலை மனோகராச்சந்தியில் அமைந்துள்ள மின்சாரசபையின் தலைமை அலுவலகத்திற்குச் சென்ற அமைச்சர்கள் கணனி மயப்படுத்தப்பட்ட வேலைகளை ஆரம் பித்துவைத்தனர். (14ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனை சந்தித்திருந்தால் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பேன்

### ஜனாதிபதி தெரிவிப்பு

(நியூயோர்க்)

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபா கரனைச் சந்தித்திருந்தால் அவருடன் பேசி யிருப்பேன் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள் ளார்.

பிரபாகரனை அவரது மரணத்திற்கு முன் னர் சந்தித்திருந்தால் அவருடன் பேசியிருப் பேன். ஆனால் என்னால் அவரைச் சந்திக்க முடியாமல் (14ஆம் பக்கம் பார்க்க)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## யாழ். மாநகரசபை சைவசமய விவகாரக் குழுவின்

# 2009 ஆம் ஆண்டிற்கான 'யாழ் விருது' அரசாங்க அதிபர் கே. கணேஷிற்கு

### ஆணையாளர் தலைமையில் கூடிய மகாசபை ஏகமனதாக முடிவு



(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையின் சைவ சமய விவகாரக்குழுவினால் வருடம் தோறும் வழங்கப்படும் அதியுயர் விருதான 'யாழ் விருது' இம்முறை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் க. கணேஷுக்கு வழங்கப்படுகின்றது.

2009 ஆம் ஆண்டிற்கான யாழ் விருது வழங்குவது தொடர்பில் யாழ்.மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழவின் மகா சபை நேற்றுக் கூடியது.

யாழ் மாநகர சபையின் ஆணையாளரும் குழுவின் தலைவருமான மு.செ. சரவணபவ தலைமையில் கூடிய மகாசபை 2009 ஆம் ஆண்டிற்கான யாழ் விருதை யாழ் அரச அதிபர் க. கணேஷுக்கு வழங்குவது என ஏகமனதாக தீர்மானித்தது.

இக் கட்டான சூழ்நிலையில் அரச அதிபர் ஆற்றிய பெரும்பணிக்காகவும் மக்கள் சமூகம் சார்ந்த அவரின் தூய சேவைக்காகவும் இவ் விருது வழங்கப்படுவதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் மு. செ. சரவணபவ தெரிவித்தார்.

விருது வழங்கும்வைபவம் ஆகஸ்ட் 4 ஆம் திகதி இடம் பெறும். சைவ சமய விவகாரக் குழுவின் அதியுயர் விருதான யாழ் விருது இதுவரை வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் வி.பி. பாலசிங்கம், வைத்திய நிபுணர் திருமதி எஸ். கணேசமூர்த்தி ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது. (ந)

## கண்காட்சி

யாழ்.மாநகர சபையின் போஷாக்கு விழிப்புணர்வுக் கண்காட்சி யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ம.மரியதாசன் தலைமை யில் நாளை மறுதினம் 17 ஆம் திகதி காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரையும் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற வுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவவும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

## டொனால்ட் பெரேராவுக்கு விரைவில் தூதுவர் பதவி

(கொழும்பு)

கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரி பதவியில் இருந்து இன்று ஓய்வு பெறும் எயார் சீப் மார்ஷல் டொனால்ட் பெரேரா வெளிநாடு ஒன்றிற்கான தூதுவர் பதவிக்கு நியமிக்கப்படவிருப்பதாக அரச வட்டாரங்கள் தெரிவித்தன. ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பங்களாதேஷ், வியட்நாம் உட்பட ஐந்து நாடுகளில் ஏதாவது ஒன்றில் இவர் தூதுவராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப் படு கிறது.

விமானப் படைத் தளபதிப் பதவி உட்பட பல முக்கியமான பதவிகளை அவர் கடந்த காலங்களில் வகித்துள்ளார்.

வான்படைத் தளபதிப் பதவியில் இருந்து ஓய்வு பெற்றபின்னர் கூட்டுப் படைகளின் தலைமை அதிகாரியாக அவர் நியமிக்கப்பட்டார்.

தொடர்ச்சியாக 30 வருட காலம் இவர் விமானப் படையில் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில் இராணுவத் தளபதிப் பதவியில் இருந்து நேற்று செவ்வாய்க்கிழமை ஓய்வு பெற்ற ஜெனரல் சரத் பொன்சேகா கூட்டுப் படைகளின் தலைமை அதிகாரியாக இன்று பதவியேற்கவுள்ளார். (ச-5)

## பெரதேனியா பொறியியல் பீடத்துக்கு யாழ்ப்பாணத்திலிருந்து 31 பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

பெரதேனியா பல்கலைக்கழகத்திற்கு பொறியியல் பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 21 ஆம்திகதி ஆரம்பமாகவுள்ளதாக பீடாதிபதி பேராசிரியர் எஸ்.பி.எஸ். அபயக்கோன் அறிவித்துள்ளார்.

இப் பீடத்திற்கு யாழ்ப்பாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 31 மாணவர்களின் விபரம் வருமாறு,

எஸ்.ஆரூரன் (வட்டுக்கேட்டை), எஸ். அருட்சுதா (கொட்டடி), ஆர். கயாயனன் (அரியாலை), எஸ்.கோபிநாத் (வண்ணார்பண்ணை), ஆர் .கோபிராகவன் (உடுப்பிட்டி), எஸ்.கரிதரன் (கரவெட்டி), பி.ஜமேஸ்ராஜி ( நாயன் மார்கட்டு), கே.ஜெயமோகன் (கைதடி), எஸ். கரிகாலன் (இணுவில்), எஸ். கர்ஜானா(உரும்பிராய்),

கே. கேசிகன் (வட்டுக்கோட்டை), பி.கிரிபரன் (அளவெட்டி தெற்கு), கே. கிருஷ்ணானந்தா (யாழ்ப்பாணம்), எஸ். நிரஞ்சனன் (யாழ்ப்பாணம்), எஸ்.நிசாந் (சண்டிலிப்பாய்), ரி.நிசாந்தினி (நெல்லியடி), கே.பிரதீபன் (சாவகச்சேரி), பி.சஞ்சீவன்( தாவடி), எஸ்.செந்தில்குமரன் (மானிப்பாய்), என்.சிவாஸ்கர் (யாழ்ப்பாணம்),

எஸ். சுயன் (ஆனனக்கோட்டை), எல். சுஜீவன் (கொக்குவில்), ஜி.தர்சினி (கந்தர் மடம்), எஸ். தேவகி (மல்லாகம்), கே. துசிதா (பருத்தித்துறை), கே. வாகீசன் (புலோலி மேற்கு), ரி.விஜிதரன் (பருத்தித்துறை), எஸ். விசாகன் (பருத்தித்துறை), கே. யாதவராஜன் (கந்தர்மடம்), கே. திவ்யன் (கல்வியங்காடு),(ச)

## 7 வருடங்கள் தொடர்ச்சியாக கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு விரைவில் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் தொடர்ச்சியாக 7 வருடங்கள் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கான இடமாற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார்.

இடமாற்ற விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவை விலக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் இடம்மாற்றம் இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமையவே இம் இடமாற்றம் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (ந)

## மன்னாருக்குச் சென்ற

## யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களை அமைச்சர் டக்ளஸ் வழியனுப்பி வைத்தார்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாகாண மட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே மன்னாரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களது நான்காவது அணியினரை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழியனுப்பி வைத்தார்.

இதன் பிரகாரம் பாடசாலை விளையாட்டு வீரர்கள், பொறுப்பாசிரியர்கள், விளையாட்டுத் துறை உத்தியோகத்தர்கள் உள்ளடங்கிய நான்காவது இறுதி அணியினர் காங்கேசன் துறைக்கு வந்தடைந்து தமது பயணத்துக்கு தயாரான நிலையில் துறைமுகத்திற்கு வந்தடைந்த அமைச்சர், அவர்களைகடற்படையினரின் குளிரூட்டப்பட்ட கப்பலில் ஏற்றி வழியனுப்பி வைத்தார்.

இந் நிகழ்வில் வட பிராந்திய கடற் படைத் தளபதி அட்மிரல் ஜெயவர்த்தன அமைச்சின் அதிகாரிகள் ஆகியோரும் மன்னாருக்கான பயணத்தை தொடர்வதற்காக காத்திருந் அணியினரை வழியனுப்பி வைத்தனர். (ச)

## வடக்கின் அபிவிருத்திக்கு மத்திய வங்கி கடனுதவி

(கொழும்பு)

வட மாகாணத்தில் பொருளாதார நடவடிக்கைகள், விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி போன்ற துறைகளை அபிவிருத்தி செய்ய விரும்பும் சிறிய மற்றும் பாரிய நிறுவனங்களுக்கு விசேட கடனுதவிகளை வழங்க இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் சிறிய மற்றும் பெரிய நிறுவனங்களுக்கு 3 ஆயிரம் மில்லியன் ரூபாய் கடனுதவி களை வழங்க மத்தியவங்கி இணங்கியுள்ளது.

வடக்கின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் வங்கிகளின் பங்களிப்பு தொடர்பாக வங்கிகளின் தலைவர்களை அழைத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆலோசனை நடத்தியிருந்தார்.

இதன் பின்னரே விசேட கடனுதவி ஒன்றை வழங்க மத்திய வங்கி முன்வந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியால் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட நிதி நிறுவனங்களின் ஊடாக இந்தக் கடனுதவி குறிப்பிட்ட ளவு வட்டிக்கு வழங்கப்பட விருப்பதாக தெரிய வருகிறது.

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கப் படைகளுக்கும் இடையே கடந்த 3 தசாப்தங்களாக தொடர்ந்த மோதல்கள் முடிபுக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் வட பகுதியில் துரித அபிவிருத்திப் பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேநேரம் தனியார் நிறுவனங்கள் பலவும் தமது செயற்பாடுகளை வடக்கு நோக்கி விஸ்தரித்திருப்பதுடன் அரசாங்கமும் வட பகுதிக்கான உற்பத்திகள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை ஊக்கப்படுத் துவதற்கான நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொண்டு உள்ளது. (ச-5)

## விண்ணப்பம் கோரல்கள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண முகாமை உதவியாளர்கள் சேவையில் 11 ஆம் வகுப்பிலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடத்தப் படவுள்ளது.

இப் பரீட்சை யாழ்ப்பாணத்திலும் நடத்தப்படும். விண்ணப்பத்தை திணைக்கள தலைவரினூடாக செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வட மாகாணம், வரோதயநகர், திருகோணமலை என்ற முகவரிக்கு 07.08.2009 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழவின் செயலாளர் சி. திவாகரன் அறிவித்துள்ளார்.

அரசாங்க, மாகாண அரசாங்க சேவை தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்களுக்கான (சிவில் எந்திரவியல்) எழுத்துப் பரீட்சை எதிர் வரும் ஒக்டோபர் மாதம் நடத்தப்படவுள்ளது.

இப் பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடத்தப்படும். அதற்கான விண்ணப்பங்கள் திணைக்கள தலைவர்கள் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளி நாட்டு பரீட்சைகள் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு இம்மாதம் 27 ஆம் திகதிக்கு பின்னரும் ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னரும் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை இன்று முதல் வலம்புரி அலுவலகத்தில் பார்வையிடலாம். (ச)


BOC **இலங்கை வங்கி**

**ஏல விற்பனை நடைபெறமாட்டாது**

வீட்டுடன் கூடிய காணி ஏல விற்பனை பிற்போடப்பட்டுள்ளது. இலங்கை வங்கி - திருநெல்வேலி சின்ன முத்துத்தம்பி வித்தியாசாலைக்கு முன்பாக இலக்கம் 116/2 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். எனும் முகவரியில் அமைந்த வீட்டுடன் கூடிய காணியின் ஏல விற்பனை 2009.07.18 ந் திகதியன்று நடைபெறமாட்டாது.

ஏலதாரர் :
க. பொ. பாலக்கிருஷ்ணன்
அதிகாரமளிக்கப்பட்ட ஏலதாரர்
நீதிமன்ற ஆணையாளர்
692, கே.கே.எஸ்.வீதி
யாழ்ப்பாணம்

முகாமையாளர் :
இ. பிரேமராஜன்
இலங்கை வங்கி
திருநெல்வேலி

(C-2814)

**தவறிவிட்டது**

இல. 79, ஜிந்துப்பிட்டி வீதி கொழும்பு -13 விலாசம் உள்ள கணேசபிள்ளை முகுந்தன் பெயருடைய எனது தேசிய அடையாளஅட்டை (இல-811670863V) இருபாலைக்கும் யாழ் நகருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க் காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
கணேசபிள்ளை முகுந்தன்
ஆர் .வி.ஜி. மருந்தகம் ,
இல:-504 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8132 ,021 222 2129

**காணவில்லை**

மா. சதீஸ்கரன் அடையாள அட்டை இலக்கம் 771723624V உந்துருளி ஆவணங்கள் அடங்கிய பேஸ் தவறியுள்ளதால் கண்டெடுத்தவர்கள் வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைத்து உதவுக.
(2958)

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் உள்ள பிரபல வர்த்தக நிலையத்திற்கு பின் வரும் பதவிகளுக்கு ,யாழ் நகரில் வசிக்கின்ற தகுதியானவர்களிடமிருந்து

பில்கிளார்க் (2) தேவை.

தகுதியானவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

T.P : 077 3866250

(C-2812)

# இன்று ஒரு தகவல்

## உள்ளிருக்கும் உண்மை

காட்டில் ஒரு குரங்கும் கழுதையும் நண்பர்களாக இருந்தன. இரண்டும் ஒருநாள் பேசிக்கொண்டன. அப்பொழுது கழுதை சொல்லியது:

"அதோ தெரிகிறது பார். அந்தப் புதரில் ஒரு சிங்கம் இருக்கிறது . அந்தப்பக்கமாகப் போகும் பொழுதெல்லாம் அது என்னிடம் வம்பு வளர்க்கிறது . என்மேல் பாய்ந்து என்னைத் தாக்குகிறது. ஏன் அப்படி செய்கிறது என்று தெரியவில்லைஎன்று கூறியது.

இதைக்கேட்டதும் அந்தக்குரங்கு, "இனிமேல் கவலைப் படாதே... இந்தத் தடவை நான் உன்னைக்காப்பாற்றுகிறேன்" என்றது. அதன்பின்னர் ஒருநாள் அந்தக் குரங்கும் கழுதையும் புதர்ப்பக்கமாக போய்க்கொண்டிருந்தன.

எதிர்பார்த்து போலவே அந்தச் சிங்கம் எதிரில் வந்தது. கழுதையைக் கண்டதும் அதன்மேல் பாய்ந்து அதைத் தாக்க ஆரம்பித்தது. இத்தனைக்கும் குரங்கு என்ன செய்தது தெரியுமா?

கிடுகிடுவென்று ஒரு மரத்தின் மேல் ஏறி உட்காா்ந்தது. அந்தக் கழுதையும் சிங்கமும் சண்டை போடுவதை வேடிக்கை பார்த்தது. சிறிது நேரம் கழித்து அடிபட்ட காயத்துடன் கழுதை மெதுவாக நடந்து வந்தது. குரங்கும் மரத்தை விட்டிறங்கி வந்தது.

"என்னைக் காப்பாற்றுவேன் என்று சொன்னாயே.. ஆனால் நீ பாட்டுக்கு மரத்தின் மேல் ஏறி உட்கார்ந்து விட்டாயே" என்றது கழுதை. இதற்கு அந்தக்குரங்கு "நான் மரத்தின் மேலிருந்து நீங்கள் இருவரும் சண்டை போட்டதைப் பார்த்துக்கொண்டுதான் இருந்தேன்.

உன்னுடைய சத்தம்தான் அதிகமாக இருந்தது. அது நீ சிரிப்பது போல் எனக்குக் கேட்டது. அதனால் நீ ஜெயித்துக்கொண்டிருக்கிறாய் என்று நான் நினைத்தேன்" என்றதாம் .

இன்றைய காலகட்டத்தில் மனிதன் இப்படித்தான் இருக்கிறான். எவன் ஜெயித்துக்கொண்டிருக்கிறான் அல்லது எவன் தோற்றுக் கொண்டிருக்கிறான் என்பதை அவன் முகத்தைப் பார்த்தும் கண்டுபிடிக்க முடியவில்லை. அவன் பேசும் பேச்சை வைத்தும் கண்டுபிடிக்க முடியவில்லை.

தேற்பவன் கூட சிரிப்பது போல முகத்தை வைத்துக்கொண்டிருக்கிறான். அவனிடம் ஏகப்பட்ட முரண்பாடுகள்

கடவுள் உலகத்தைப் படைத்துவிட்டு இங்கேயே சிறிது காலம் தங்கியிருந்தாராம். அப்பொழுது தான் அது எவ்வளவு இடைஞ்சல் என்பது அவருக்குப் புரிந்ததாம்.

தினமும் மனிதர்கள் தேடிவந்து ஏதாவது முறையிட்டுக் கொண்டே இருந்தார்களாம். எனக்கு அது வேண்டும் இது வேண்டும் என்று கேட்டுக்கொண்டே இருந்தார்களாம்.

சிலர் வந்து "நாங்கள் விவசாயம் செய்கிறோம்..தண்ணீர் இல்லாமல் பயிர் காய்கிறது எங்களுக்கு மழை வேண்டும்" என்றார்கள்.

அவர்கள் போனதும் இன்னும் சிலர் வந்து, "நாங்கள் மண் பானை செய்பவர்கள். மழை பெய்தால் எல்லாம் கரைந்து வீணாகிவிடும். அதனால் மழை இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்" என்றார்களாம். கடவுளுக்கு ஒரே குழப்பம்.

எல்லோருடைய ஆசைகளையும் அவரால் நிறைவேற்ற முடியவில்லை. ஒன்றுக்கொன்று முரணாக இருந்தது.

ஒருநாள் தன்னுடைய அமைச்சரவையைக் கூட்டி ஆலோசனை கேட்டார்.

"இதென்ன பிரமாதம்? பேசாமல் இமயமலைக்குப் போய் உட்கார்ந்து கொள்ளுங்கள். யாரும் தொந்தரவு செய்யமாட்டார்கள்" என்றார்கள்.

"அங்கும் மனிதர்கள் வர ஆரம்பித்து விடுவார்கள்" என்றார் கடவுள்.

"சரி... அப்படியானால் சந்திரனில் போய் இருக்கலாம்" என்றார்கள்.

"அங்கும் மனிதன் வரப்போகிறான்" என்றார் கடவுள்.

"தூரத்திலுள்ள நட்சத்திர மண்டலத்துக்குப் போய் விடலாம்" என்றார்கள்.

"இதெல்லாம் நிரந்தரத் தீர்வாகாது. நிரந்தரமாக மனிதனுடைய தொல்லையிலிருந்து விடுபட வேண்டும். அதற்கு வழி சொல்லுங்கள்" என்றார் கடவுள்.

வயதானவர் ஒருவர் வந்து கடவுளின் காதோடு காதாக ஒரு வழியைச் சொன்னார். கடவுளின் முகம் மலர்ந்தது.

"அதுதான் சரி. அப்படியே செய்யலாம்" என்றார் கடவுள்.

அவர் சொன்ன ரகசியம் என்ன தெரியுமா?

"மனிதனால் அடைய முடியாத ஒரு இடம் இருக்கிறது. அது வேறெங்கும் இல்லை. அவனுக்குள்ளேயே இருக்கிறது. அங்கு போய் மறைந்து கொள்ளுங்கள். மனிதனால் உங்களுக்கு இடைஞ்சல் இருக்காது" என்றார்.

மனிதன் நினைக்காத இடம் அதுதான். உள்ளுக்குள் இருக்கும் உண்மையைப் புரிந்து கொள்ளாமல் வெளியில் எங்கேயோ அது இருப்பதாக நினைத்து விரட்டிக் கொண்டு அலைகிறான் மனிதன்.

ஒரு அம்மா... அப்பாவிடம் சொன்னார்.

"இதோ பாருங்க... நம்ம பையன் எங்கே பணம் வைத்தாலும் எடுத்துவிடுகிறான். என்ன செய்வது?" என்றார்.

அப்பா யோசித்துவிட்டு "அவன் கண்ணில் படாத இடமென்றால் ஒரே ஒரு இடம்தான் அங்கே பணத்தை வை. திருட்டுப் போகாது" என்றார்.

"அது எந்த இடம்?" என்றார் அம்மா.

"அதுதான் அவனுடைய பாடப்புத்தகம். அதில் வை. அதைத் தொடவே மாட்டான்" என்றார் அப்பா.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# உயர்கல்வித்துறை அபிவிருத்திக்கு உலக வங்கி 5 கோடி டொலர் உதவி

## உயர்கல்வி அமைச்சர் விஸ்வ வர்ணபால தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் உயர்கல்வித் துறை அபிவிருத்திக்கு உலக வங்கி 5 கோடி டொலரை வழங்கியுள்ளது. அடுத்து 5 வருடங்களுக்குள் இந்த உதவித் தொகையை அதிகரிப்பதற்கு உலக வங்கி இணக்கம் தெரிவித்திருப்பதாக அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால தெரிவித்துள்ளார்.

தற்கால தேவை மற்றும் நவீன உலகிற்கு அவசியமான வகையில் உயர்கல்வித் துறையை நவீனமயப்படுத்த வேண்டுமென அமைச்சர் கூறியுள்ளார்.

குறிப்பாக பல்கலைக்கழக பாடநெறிகள் காலத்தின் தேவைக்கும் தொழில் சந்தைக்கும் ஏற்றவகையில் நவீனமயப்படுத்தப்பட வேண்டும்.

இந்த இலக்கை அடைவதற்காக அடுத்த கல்வி ஆண்டில் புதிய பாடநெறிகள் பல்கலைக்கழகங்களில் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இதற்காக உலக வங்கியின் வழிகாட்டலும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகம் அடுத்த கல்வி ஆண்டு முதல் விலங்கு வேளாண்மை மற்றும் மீன் வளர்ப்பு தொடர்பான புதிய பாடநெறியொன்றை ஆரம்பிக்கவுள்ளது. இதற்காக 50 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஊவா வெல்லச பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள நீரியல் வள தொழில்நுட்ப பாடநெறிக்காக 50 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். சுற்றுலா முகாமைத்துவம், விருந்தோம்பல் போன்ற துறைகளுக் காக புதிய பாடநெறி ஆரம்பிக்கப்படும்.

வடமேல்பல்கலைக்கழகம் உணவு உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவம் என்னும் பாடநெறியை ஆரம்பிக்கவுள்ளது.

வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய தொழில்நுட்ப கல்லூரிகள் உட்பட நாட்டில் உள்ள அனைத்து தொழில்நுட்ப கல்லூரிகளையும் விரைவில் அபிவிருத்தி செய்யவுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

அடுத்த வருடம் பல்கலைக் கழகங்களுக்கு சேர்த்துக் கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை 620 ஆல் அதிகரிக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. ஓ

## க.பொ.த. உ/த பரீட்சைக்கு


# நலன்புரி முகாம்களில் 7 பரீட்சை நிலையங்கள்

க.பொ.த. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி முதல் செப்டம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை நாடு பூராகவும் அமைக்கப்படும் 2 ஆயிரம் பரீட்சை நிலையங்களில் நடத்துவதற்கான நடவடிக்கைகளை பரீட்சைகள் திணைக்களம் மேற்கொண்டு வருவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களிலுள்ள ஏறக்குறைய 856 மாணவர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு ஏக காலத்தில் தோற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கென 7 பரீட்சை நிலையங்கள் நலன்புரி முகாம்களில் அமைக்கப்படுமெனவும் இப்பரீட்சை நிலையங்களில் கடமை புரிவதற்கென முகாம்களிலுள்ள ஆசிரியர்களை நியமிப்பதற்கான அனுமதியை பாதுகாப்பு தரப்பினரிடம் கோரி யுள்ளதாகவும் பரீட்சைகள் திணைக் களம் குறிப்பிட்டுள்ளது.

நிவாரண முகாம்களிலுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சை மற்றும் 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை என்பவற்றுக்கு தோற்றவுள்ள மாணவர்களைக் கருத்திற் கொண்டு அவர்களுக்குத் தேவையான மாதிரி வினாத்தாள்கள் மற்றும் அப்பியாசக் கொப்பிகள் பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் உயர் அதிகாரியொருவர் குறிப்பிட்டார். (ஓ-4)



யாழ்ப்பாணம் பிரசித்திப் பெற்ற மூன்றாம் கைலாசமென அழைக்கப்படும் நல்லூர் ஸ்ரீ கைலாச நாதர் கைலாசப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் அண்மையில் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினால் நடத்தப்பட்ட முதலாம் திருமுறை முற்றோதல் நிறைவு வைபவத்தில் அகில இலங்கைத் திருமுறை மன்றத்திற்கு ஆலய சிவாச்சார்யர்களான சிவஸ்ரீ கு. குமாரசாமி குருக்கள், சிவஸ்ரீ கு. மணிக்குருக்கள், கு. கோபால சர்மா, கு. ஆனந்த குமாரசாமி சர்மா ஆகியோர்களினால் அன்பளிப்பு செய்யப்பட்ட அழகிய சுந்தரமுத்து பல்லக்கில் சைவ நாயன்மார்கள் எழுந்தருளி வீதி உலா வருவதையும் படத்தில் காணலாம்.

## இராசி பலன்

15.07.2009

(ஆனி 31, புதன்கிழமை)

அட்டமி முன்னிரவு 10.44 மணிவரை

ரேவதி பிற்பகல் 1.34 மணிவரை

இராகுகாலம் 12.00-1.30 மணிவரை

சுபநேரம் 4.30-6.00 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | சிந்தனை மிகுதி, பெரியோர் சந்திப்பு, போசன சுகம், அதிக பிரயாசை. |
| இடபம் | எடுத்த காரியம் தாமதமாகும், மனஸ்தாபம், சயன சுகக் குறைவு, நண்பர்கள் சந்திப்பு. |
| மிதுனம் | முயற்சி கைகூடும், பிறர் ஒத்துழைப்பு, பெருமையடைதல், நல்ல செய்தி. |
| கடகம் | அதிகாரம், நண்பர்கள் உதவி, செய்தொழில் விருத்தி, போசன சுகம். |
| சிங்கம் | புதிய திட்டமிடல், சரீரப் பிரயாசை, வீண் பயம், பிதாசிந்தை. |
| கன்னி | அபகீர்த்தி, காரிய தாமதம், உடல் நலக்குறைவு, போசன சுகக் குறைவு. |
| துலாம் | காரிய அனுகூலம், தனதானிய சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு. |
| விருச்சிகம் | நோய் குணமடைதல், பகைவர் நேசம், மனமகிழ்ச்சி, முயற்சி கைகூடும். |
| தனுசு | வேலைச்சுமை, அமைதிக் குறைவு, முயற்சி தாமதம், பணக் குறைவு. |
| மகரம் | உறவினர் சந்திப்பு, ரோக பயம், கல்வியில் ஆர்வம், வாகன சுகம். |
| கும்பம் | சகோதரர் உதவி, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, வாக்கு மேன்மை. |
| மீனம் | கௌரவக்குறைவு, காரிய தாமதம், பணவிரயம், விவாதம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 30 | 50 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 130 | 90 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 60 |
| தக்காளி | 200 | 220 | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | 100 | 130 | -- |
| கரட் | 90 | 110 | 70 |
| பூசணி | 20 | 30 | 30 |
| புடோல் | 50 | 60 | 20 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 60 |
| பெரிய வெங்காயம் | 60-80-90 | 60-70-90 | 100 |
| பாகற்காய் | 60 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 20-30 | 50 | 30 |
| கரணைக் கிழங்கு | 60 | 90 | -- |
| பயிற்றங்காய் | 60 | 80 | 40 |
| லீக்ஸ் | 70 | 90 | 100 |
| பீற்றூட் | 50 | 60 | 40 |
| கறிமிளகாய் | 60 | 80 | 60 |
| முருங்கைக்காய் | 340 | 400 | 350 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 15 |
| தேசிக்காய் | 80 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 30 | 25 |

## இலவச மாலை நேர வகுப்புகள்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு அற்புத மத்தியஸ் தானம் அசெம்பிளி ஒவ் கோட் திருச்சபையி னரால் உரும்பிராய் செல்வபுரம் பகுதியில் இல வச மாலை நேர வகுப்புகள் கடந்த புதன்கி ழமை தொடக்கம் நடைபெற்று வருகின்றன.

5 ஆண்டு கால திட்டமாக வகுக்கப்பட்டு கல்விப் பணி இடம் பெற்று வருவதாகவும் இத் தேவ காரியத்தில் இணைய விரும்புபவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் திருச் சபையின் போதகர் சகோ. வி.பி.கே. ராஜா கேட்டுள்ளார். (ஓ-36)

## தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் உதவியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையினரால் ஒழுங்கு செய் யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் கடமை யாற்றும் தொழில்நுட்ப அலுவலர்கள், தொழில் நுட்ப உதவியாளர்கள், தொழில்நுட்பம் சார் கடமைபுரியும் அலுவலர்கள், தொழில்நுட்பம் சார் கல்வி பயிலும் மாணவர்களுக்கான பயிற்சிப்பட்டறை நாளையும், நாளை மறு நாளும் நடைபெறவுள்ளது.

நிர்மாணத்துறை முகாமை எனும் பொரு ளில் கொக்குவில் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் இப்பயிற்சிப் பட்டறை யில் பொறியியலாளர் சி. உருத்திரலிங்கம் பயிற்சிகளை வழங்கவுள்ளார்.

இதில் நாளை வியாழக்கிழமை திட்டமிட லும் கூறல் ஆவணங்களும் (Planning & Tender Documents), கூறலுக்கான நெறி முறைகள் (Tender Procedures) எனும் விட யங்களிலும் நாளை மறுநாள் வெள்ளிக் கிழமை கணியச் சிட்டையும் மதிப்பீடும் (Bill of Quantities & Estimate), ஒப்பந்த முகாமைத் துவம் (Contract Management) ஆகிய விட யங்கள் பற்றியும் பயிற்சிகள் வழங்கப்படவுள் ளதாக நல்லூர் பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு அருள்தரு கேணி யடி காளி அம்பாளின் வருடாந்த மஹோற் சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடை பெறும். ஆடிப் பூரத்தன்று தீர்த்த திரு விழாவு டன் மஹோற்சவம் நிறைவு பெறும். (ஓ-36)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வ சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சி ரமத்தின் சைவ கலை பண்பாட்டுப் பேரவையி னால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடை பெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணி யளவில் வில்லிசைக் கலைஞர் க. சத்தியநாத னின் பஜனை இடம்பெறும். (ஓ-35)

## காணாமல் போனோர் குறித்து ஈரோஸ் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலங்களில் யாழ். குடநாட்டில் காணாமல் போனவர்கள் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளிற்காக அவர்களின் உறவுகள் யாழ்ப்பாணம் கோவில் வீதியில் அமைந் துள்ள ஈரோஸ் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு ஈரோஸ் அமைப்பின் செய லாளர் நாயகம் இரா. பிரபாகரன் அறிவித் துள்ளார். (ச)

## யாழ். முகாமையாளர் சங்கத்தின் 'நுண்பாக நிதி' தொடர்பான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். முகாமையாளர் சங்கத்தினால் நடத் தப்படும் நுண்பாக நிதி பற்றிய செயலமர்வு எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் யாழ். பல் கலைக்கழக முகாமைத்துவ பீட பேராசிரியர் எம். நடராஜசுந்தரம் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை யாழ். இலங்கை வங்கி உதவி பொது முகாமையா ளர் என். சிவரட்ணம் வழங்கவுள்ளதுடன் சிறப் புரையை யாழ். விவசாய திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் கே. சிவகுமார், யாழ். மாவட்ட செய லக மீள் எழுச்சி பிரதி திட்ட இயக்குநர் வி. விஸ் வலிங்கம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

அத்துடன் நிகழ்வில் 'நுண்பாக நிதி' என் னும் விடயம் பற்றி இலங்கை மத்திய வங்கி யின் பிராந்திய அபிவிருத்திப் பணிப்பாளர் டபிள்யூ. எம். கருணாரத்ன கருத்துரை வழங்க வுள்ளார்.

தொடர்ந்து இவ்விடயம் குறித்து கலந்துரை யாடலும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

## நான்காம் திருமுறை முற்றோதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத் தில் நடாத்தி வரும் மூன்றாந் திருமுறை முற் றோதல் நாளை வியாழக்கிழமை நிறைவு பெற்று அன்று காலை 7 மணிக்கு நடை பெறும் ஆல யப் பூசையுடன் நாயன்மார் நால்வர், திரு முறைச் சுவடிகளுக்கும் விசேட பூசை, வழிபா டுகள் நடாத்தி அழகிய சுந்தர முத்து பல்லக்கில் எழுந்தருளி நாவலர் வீதி ஊடாக யாழ்ப்பா ணம் மணிக்கூட்டு வீதி வழியாக ஸ்ரீ வெங்க டேசப் பெருமான் தேவஸ்தானத்திற்கு முன்பாக உள்ள அருள்மிகு அரசடிப் பிள்ளையார் ஆல யத்தை வந்தடைந்து விசேட பூசை, வழிபாடு கள் நடை பெற்று மறுநாள் வெள்ளிக்கிழமை ஆடிமாதப் பிறப்பன்று காலை 6.30 மணி க்கு நடைபெறும்.

ஆலயப் பூசையைத் தொடர்ந்து மன்றத் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலை மையில் நான்காந்திருமுறை முற்றோதல் ஆரம்பமாகித் தினமும் காலைப் பூசையுடன் நான்காந் திருமுறை முற்றோதல் நடைபெற வுள்ளது. (ஓ)

## சொற்பொழிவாளர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலய மஹோற்சவ காலங்களில் 'கம்பராமாயணம்' எனும் பொருளில் தொடர் சொற்பொழிவாற் றியமை குறித்து அவ்வாலய பரிபாலனசபை, சொற்பொழிவாளர் பண்டிதர் பொன். சுகந்த னுக்கு 'பல்கலை அரசு' என்னும் விருதினை வழங்கி கௌரவித்துள்ளனர்.

இம்மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற இக் கௌரவிப்பு நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ. வரதீஸ்வரன் சொற்பொழிவாளர் பொன். சுகந்தனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்துள்ளார். (ஓ-35)

## பகுதிநேர விரிவுரையாளர் விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் பின்வரும் பாடங்களைப் போதிப் பதற்கான பகுதி நேர விரிவுரையாளர்களுக்கு 2009 ஆம் ஆண்டு 2 ஆம் அரையாண்டுக் கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதியானவர்கள் நிறுவனத்தில் விண் ணப்பப் படிவங்களை பெற்று இம்மாதம் 21 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு நிறு வனப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.ஜே. எம். சகா யன் கேட்டுக் கொண்டுள்ளார்.

பாட விபரம் வருமாறு,

Business Communication வியாபாரத் தொடர்பாடல், Advanced Financial Reporting உயர் நிதியியல் அறிக்கைகள், Corporate Law கூட்டுறவுச் சட்டம், Financial Management நிதியியல் முகாமைத்துவம் Advanced Auditing Assurance உயர் பரிசோதனை ஒப்பந்தம், Advanced Communication Skills உயர் தொடர்பாடல், Literature in English ஆங்கில இலக்கியம், Use of English ஆங்கிலப் பாவனை, Practical Criticism செயல்முறை விமர்சனம் (ஓ)

## சாவகச்சேரி நகர சபையின் உள்ளூராட்சிவார இறுதிநாள் நிகழ்வுகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபைக்கு உட்பட்ட உள் ளூராட்சி வார நிகழ்வுகளுக்கான முன் நிகழ்ச்சி திட்டங்கள் கடந்த 9 ஆம் திகதி ஆரம் பமாகி நடைபெற்றுவருகின்றன.

இறுதி நாளான இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி நகரசபை மாநாட்டு மண்டபத்தில் உள்ளூராட்சி வார இறுதி நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வெற்றி பெற்ற மாணவர்க ளுக்கு சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங் குதல், முதல்நிலை பெற்ற நிகழ்வுகளில் முக் கியமானவற்றை வெளிப்படுத்தல், நகரணி உள்ளூராட்சி வார இதழ் வெளியிடுதல், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளதாக சாவகச்சேரி நகரசபை செயலாளர் அறிவித் துள்ளார். (ஓ-4)




## இலவச கண்புரை பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் இன்று புதன்கிழமை மதியம் ஒரு மணியிலி ருந்து வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள கண் புரையால் பார்வை பாதிக்கப்பட்டவர்களை கண் சத்திரசிகிச்சை நிபுணர் எஸ். குகதாசன் தலைமையில் கண் பரிசோதனை நடாத்தி சத்திரசிகிச்சை செய்யப்பட வேண்டியவர்களை இனங்கண்டு சத்திரசிகிச்சை செய்வதற்கு நட வடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை பணிப்பாளர் சபை அறியத்தருகிறது.

இச்சேவையினை வழங்குவதற்கு 'மனித நேயம் அமைப்பு அனுசரணை செய்வதால் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வறுமைக் கோட்டிற்கு கீழுள்ளோர் பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ச)

## இலவச மருத்துவ சேவை

(யாழ்ப்பாணம்)

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணி யிலிருந்து மதியம் 2 மணிவரை யும் அனைத்து விதமான நோய்களுக்கும் ஆலோசனைகளும், சிகிச்சைகளும், மருந் துகளும் முற்றிலும் இலவசமாக வழங்கப் படும்.

அத்துடன் நீரிழிவுக்கான இரத்தப் பரிசோ தனைகளும் இலவசமாக மேற்கொள்ளப் படும் என்று மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை பணிப்பாளர் சபை தெரிவித்துள்ளது. (ச)


## சாந்தி நிலையத்துக்கு மகுடவாசகம் தேவை

(யாழ்ப்பாணம்)

கைதடி அரச முதியோர் இல்லத்திற்கு கொடி ஒன்றை தயாரிப்பதற்கு அந்தக் கொடிக்கு ஒரு மகுட வாக்கியம் தேவையாக உள்ளது.

அதனை பொது மக்களிடமிருந்து பெற வேண்டுமென முகாமைத்துவக் குழு தீர் மானித்துள்ளது.

எனவே பொதுமக்கள் பொருத்தமான மகுட வாக்கியத்தை அனுப்பி வைக்குமாறு அத்தி யட்சகர் என். இராஜலிங்கம் கேட்டுள்ளார். (ச)



கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற ஸ்ரீ தட்சணாமூர்த்தி வழிபாடு எனும் நூல் வெளியீட்டின் போது நூலாசிரியர் திருமதி மனோன்மணி குலசிங்கம் உரையாற்றுவதையும், நூலின் முதற்பிரதியை நல்லை ஆதீன முதல்வரிடம் இருந்து ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ இ. ரமணீதக் குருக்கள் பெற்றுக் கொள்வதையும், இந்நூல் வெளியீட்டின் போது கிடைக்கப் பெற்ற அன்பளிப்புகளை நலன்புரி நிலைய மக்களுக்கு வழங்குவதற்காக இந்து அமைப்புக்களின் ஒன்றியத்திடம் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# யாழ்ப்பாணத்திலும் டெங்கு அபாயம்

## எச்சரிக்கிறார் யாழ். சுகாதாரப் பணிப்பாளர்

டெங்கு காய்ச்சல் பரம்பல் எச்சரிக்கை

இலங்கையின் பல மாவட்டங்களிலும் டெங்கு காய்ச்சல் வேகமாகப் பரவியுள்ளது. இலங்கையில் இவ்வருடம் இதுவரை 170 பேர் டெங்கு காய்ச்சலினால் உயிரிழந்துள்ளதுடன் 16 ஆயிரத்து 179 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் தற்போது வரை இந்நோயின் தாக்கம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளது. யாழ் மாவட்டத்தில் இதுவரை 09 பேர் இவ்வருடம் டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் யாழ் மாவட்டத்தில் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் பரவலாகக் காணப்படுகின்றன. தற்போது நாட்டில் சுமூகநிலை ஏற்பட்டமையால் தென்பகுதியிலிருந்து தினமும் யாழ் மாவட்டத்திற்கு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இங்கு வருவோரில் ஒருவர் டெங்கு நோய்க்கிருமியுடன் வருகை தந்தால் இங்கும் இந்நோய் வேகமாகப் பரவி பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் வாய்ப்புக்கள் உள்ளன.

எனவே டெங்கு நோயின் பரம்பலை யாழ் மாவட்டத்தில் தடுக்க வேண்டுமாயின் இந்நோயைப் பரப்பும் நுளம்புகளைக் கட்டுப்படுத்த வேண்டும். டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை பொதுமக்கள் தத்தமது வீடுகளிலும், சுற்றாடலிலும் அழிக்க வேண்டும். பாடசாலைகளில், நிறுவனங்களில் பொது இடங்களில் சிரமதானம் மூலம் இவை அழிக்கப்பட வேண்டும்.

தற்போது யாழ் மாவட்டத்தில் மலேரியா தடை இயக்கத்தைச் சேர்ந்த பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்களும் ஏனைய களப் பணியாளர்களும் வீடு வீடாகச் சென்று வீட்டு சுற்றாடலைப் பார்வையிட்டு இது சம்பந்தமான ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர். அவர்களது ஆலோசனைப்படி நடந்து ஒத்துழைப்பு வழங்கி டெங்கு நோயை கட்டுப்படுத்த உதவுமாறு வேண்டுகின்றோம்.

இதேவேளை, டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்த தவறுபவர்கட்கு எதிராக கடும் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் கீழ் கூடுதலான அபராதமும், சிறைத் தண்டனையும் விதிக்கப்படலாம்.

பல மாவட்டங்களில் இச்சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் யாழ் மாவட்டத்தில் இச்சட்ட நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்க விரும்பவில்லை. பொதுமக்களின் ஒத்துழைப்புடனேயே நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்க விரும்புகின்றோம்.

ஆனால் இதற்கு யாராவது ஒத்துழைக் மறுத்தால் சில தனி நபர்களின் தவறுகளால் ஒரு சமூகம் பாதிக்கப்படுவதை நாம் அனுமதிக்க முடியாது. அவர்கட்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தயங்க மாட்டோம் என்பதை தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

**சட்டத்திலுள்ள பிரதான முக்கிய அம்சங்கள்**

1. சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கான அதிகாரம் அந்தப் பகுதியின் சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் பொது சுகாதாரப், பரிசோதகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2. நுளம்பினால் பரவும் நோய்களைத் தடுப்பதற்கும் இல்லாது ஒழிப்பதற்கும் பின்வரும் கடமைகளை வீட்டு/வளவு உரிமையாளர்/குடியிருப்பாளர் மேற்கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

a. திறந்த நிலையிலுள்ள தகரடப்பாக்கள், போத்தல்கள், தேங்காய் சிரட்டைகள், கோம்பைகள், ரயர்கள் மற்றும் நீர் தேங்கி நிற்கக்கூடிய சகல கொள்கலன்களும் அகற்றப்பட்டு/அழிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

b. நீர் வழிந்தோடும் பீலிகள் மற்றும் வாய்க்கால்கள் போன்றவை நீர் தடையின்றி ஓடும் வகையில் பேணப்படல் வேண்டும்.

c. நீர்த்தாங்கிகள், தொட்டிகள் மற்றும் குளிரூட்டி (A/C) ஒழுங்கான முறையில் சீரமைக்கப்பட்டு நுளம்புகள் உட்புகுந்து பெருகாதவாறு பேணப்படல் வேண்டும்.

d. கிணறுகள் மற்றும் கிணற்றுச் சுற்றாடல் சீராக்கப்பட்டு நுளம்புப் பெருக்கம் ஏற்படாதவாறு பேணப்படல் வேண்டும்.

e. நீச்சல்/நீர் தொட்டிகள் கிழமைக்கு ஒரு தடவையாவது வெறுமையாக்கப்பட்டு துப்பரவு செய்யப்படல் வேண்டும்.

f. வீட்டு வளவினுள் /காணியினுள் தேங்கும் நீர், நுளம்புகள் பெருகாதவாறு கிரமமான முறையில் அகற்றப்படல் வேண்டும்.

g. செடிகள், புதர்கள் மற்றும் நீர் தேங்கி நிற்க ஏதுவான சகல தாவரங்களும், மற்றும் அலங்காரத்திற்காக வீடுகளினுள் அல்லது வெளியில் பூங்கன்று வளர்க்கப்படும் பூச்சாடிகள் நுளம்புகள் பெருகுவதற்கு வாய்ப்பானவை. இவை நுளம்புகளின் பெருக்கத்திற்கு இடமளியாதவாறு பேணப்படல் வேண்டும். இல்லாவிடில் இவை அகற்றப்படல் வேண்டும்.

h. நீர் நிலைகளில் நீர்த்தவரங்கள்/நீர்க்களைகள்/பாசிகள் இல்லாதவாறு பேணப்படல் வேண்டும்.

3. வளவுகள் அல்லது அவற்றினுள் காணப்படும் அல்லது பேணப்படும் எதுவும் நுளம்புப் பெருக்கத்திற்கு சாதகமானதென தகுதி வாய்ந்த அதிகாரிக்கு தோன்றுமிடத்து அவர் எழுத்து மூலமான அறிவித்தல் மூலம் குறித்த காலப்பகுதியினுள் திருத்தங்களை செய்யுமாறு சொந்தக்காரருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு பணிக்கப்படுதல்.

4. நுளம்பு பெருக்கதிற்கு சாதகமான நிலைமைகளை வைத்திருக்கும், இந்நிலைமைகளை இல்லாதொழிக்க தேவையான குறித்த நடவடிக்கைகளை மற்றும் மேற்கொள்ளாது இருக்கும் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் இச்சட்டத்தின் கீழ் குற்றவாளியாவார்.

5. நீதி மன்றத்தினால் குற்றவாளியாக காணப்படுமிடத்து ஆயிரம் ரூபாவிற்கும் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவிற்கு மேற்படாததுமான குற்றப்பணத்திற்கும் மேலும் தவறு தொடர்ந்து புரியப்படுமிடத்து குற்றத்தீர்ப்பின் பின்னர் இத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படுமாயின் ஒவ்வொரு மேலதிக நாளுக்கும் நூறு ரூபா குற்றப் பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

வைத்திய கலாநிதி
ஆ. கேதீஸ்வரன்
பிராந்திய பணிப்பாளர்
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

மேற்குறித்த நடவடிக்கைகளுக்கு பொது மக்கள் ஒத்துழைப்பு நல்கி யாழ் மாவட்டத்தில் டெங்கு நோய் பரவாது கட்டுப்படுத்த உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச்சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

ஒபாமாவின் நிதிநிலை குறைந்த போது இந்திய நண்பர்கள் கைகொடுத்துதவியுள்ளனர். தங்க இடமில்லாத சமயங்களில் அவரைத் தங்கள் இல்லங்களுக்கு அழைத்துச் சென்ற தங்க வைத்து ஆதரித்ததை அவர் என்றுமே மறப்பதற்கில்லை. இவற்றையெல்லாம் கேட்டபின்பும் ஒளமாவின் உள்ளம் இளக்கவில்லை. ஒபாமா பாவம். ஒன்றும் அறியாதவர். எதையும் நம்பி விடுவார். அவள் மேற்கொண்டு ஏதும் பேசாமல் திரும்பி விட்டாள்.

மூன்றாம் உலகத்தின் ஒருமைப்பாட்டுக்கு ஒபாமாவின் வாய்ப்பாடு கென்யாவில் எடுபடாது என்பதையுணர்ந்தார். இந்தோனேஷியாவில் சீனர்களும், அமெரிக்காவின் தென் சிகாகோ நகரில் கொரிய நாட்டவர்களும் போல கென்யாவில் இந்திய வம்சா வழியினரும் வியாபாரத்தில் கொடிகட்டிப் பறந்தனர். தம் தொழிலில் கண்ணும் கருத்துமாக இருந்து கொண்டு தங்களுக்கு தாங்களேயென்று ஒரு வட்டத்துக்குள் வாழ்ந்து வருகின்றனர். இதன் பயனாக அவர்கள் இனப்பாகுபாட்டின் வெளிப்படையாகப் புலனாகும் எல்லைப் பயன்பாட்டை பயன்படுத்தி விரோதத்துக்கும் எதிர்ப்புக்கும் உள்ளாகிறார்கள். இது வரலாற்றுத் தவறு தான்.

கென்யாவில் இருக்கும் பழங்குடி மக்கள் இனத்துக்குள்ளேயே பல உப பிரிவுகள் இருக்கின்றன. ஆயினும் இவற்றை ஒளமா போன்ற படித்த நண்பர்களிடம் காண்பது அரிது. பல்கலைக்கழகங்களில் ஓர் இனம், ஒரு நாடு என்ற போதனைகளுக்கு ஆளாகிய கென்ய இளம் சமுதாயம் இந்த இனப்பாகுபாட்டை மறந்து விட்டது. ஆயினம் பழங்குடிமை(Tribalism) சில வேளைகளில் தலைகாட்டத்தான் செய்தது.

லூவோ இனத்தவர்கள் புத்திக் கூர்மையுள்ளவர்கள். ஆனால் சோம்பேறிகள். கிக்குயு இனத்தவர்கள் எங்கே போனாலும் பணம் சம்பாதிப்பது எப்படி என்று தான் சிந்திப்பார்கள். கலேன்ஜின்ஸ் என்ற இனத்தவர்கள் தான் நாட்டை ஆட்சி செய்கின்றார்கள். அவர்கள் அரசைநடத்தும் விதம் எல்லோருக்கும் தெரியுமே.

இவ்வாறு வயது போனவர்கள் இனங்களைப் பற்றிப் பேசுவார்கள்.



ஒபாமாவின் மாமிமார்களாகிய ஜேன், ஜெயிற்றூன் ஆகியோர் பழமையில் ஊறிப் போய் சாதி, இனம் என்று அடிக்கடி பேசுவதைக் கேட்ட ஒபாமா அவர்களின் தவறான கோட்பாட்டைத்தகர்த்தெறிய எண்ணி அறிவுரை வழங்கினார். இந்த மாதிரியான எண்ணங்கள் நம்மவர்களை முன்னேறாமல் தடுத்து வைத்திருக்கிறது. கென்ய மக்கள் எல்லோரும் ஒரு இனம். கறுப்புஇனம். மனித இனம். ஆக ,நைஜீரியாவிலு லைபீரியா விலும் பழங்குடி மக்களிடையே இருந்த இன வேறுபாடு மக்களைக் கொன்ற குவித்துச் சீரழித்துள்ளதைப் பார்க்கவேண்டும் என்று எச்சரித்தார்.

இப்போது வண்டி ஓரிடத்தில் நின்றது. ஓட்டுநர் இறங்கி ஆபிரிக்கச் சிறுமி ஒருவரை அழைத்து வந்தான். அவளும் மற்றவர்களுடன் சரணாலயம் பார்க்கப் போகிறாள். பிரான்சிஸின் சகோதரியின் மகள் என்று அவளை அறிமுகம் செய்து வைத்தான். அவன் வண்டி மலைப்பாங்கான இடங்களைக் கடந்து வெட்ட வெளியான பள்ளத்தாக்குக்கு வந்தது. அதன் பெயர் பெரிய பிளவுபட்ட பெரிய பள்ளத்தாக்கு Great Rift Valley என்றான் பிரான்சிஸ்.

95

அந்தப் பள்ளத்தாக்கின் ஊடாக வண்டி போய்க் கொண்டிருந்தது. வறண்டு காய்ந்த புற்றரை கண்ணுக்கெட்டிய தூரம் வரை காட்சி தந்தது. மந்தைகளை மேய்த்துக் கொண்டு மசாய் இனத்து வீரன் வந்து கொண்டிருந்தான். ஒபாமா அவர்களைப் பற்றி நிறைய புத்தகங்களில் படித்திருந்தார். ஆயினும் அவர்களில் யாரையும் நைரோபியில் அவரால் காண முடியவில்லை.

மசாய் வீரர்கள் மந்தை மேய்ப்பவர்களாகவும், பயங்கரமான போர் வீரர்களாகவும் திகழ்ந்துள்ளனர். பிரித்தானிய அரசு அவர்களுடன் பல தடவைகள் போரிட்டும் சமாதானமும் செய்திருந்தனர். எனினும்

**ஜம்பொன்**

விரும்பியோ விரும்பாமலோ மசாய் வீரர்களின் துணிவையும், சுதந்திர உணர்வையும் அவர்களால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. ஆகையினால் அவர்களின் புகழ் அவர்களின் தோல்வியிலும் கூட புராணங்களில் வரும் கதைகளாக புழக்கத்தில் இருக்கிறது. இன்று அவர்களின் நடமாட்டம் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பகுதிகளில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட நிலங்களையும் கவர்ந்தெடுக்கு கென்ய நாட்டு மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஆனால் அரசு அவர்களுக்கு கட்டாயக் கல்வியையும், நிலவுரிமையையும் வழங்கி, தங்களிலும் குறைந்த வளம் கொண்ட அந்த மக்களை நாகரிக்கப்படுத்தும் பொறுப்பு தங்களுடையதே என்பதை ''கறுப்பனின் சுமை''( BlackMan Burden) என அரசப் பணியாளர் ஒருவர் கூறினார். (தொடரும்)•

## ஆங்கிலப் பாசறை

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வராக்கல்லூரியின் வெளிச்ச வீடு பாடசாலை அலகு தரம் 9 மாண வர்களுக்கான ஆங்கில பாசறை ஒன்றினை எதிர்வரும் 18ஆம் திகதி சனிக் கிழமை அன்று நடத்தவுள்ளது.

யாழ். கல்விக்கோட்டத்திற்குட்பட்ட 17 பாடசாலைகளைச் சேர்ந்த 68 மாணவர்கள் இப் பாசறையில் கலந்து கொள்வர்.

பாடல் ,மொழி விளையாட்டு, எழுத்தாக் கம், கதை சொல்லல் போன்ற செயற்பாடு கள் ஊடே மாணவர்களின் மொழிவிருத்தி மேம் பாடு நடைபெறவுள்ளமை இப்பாசறையின் சிறப்பம்சமாகும். (ஓ)

## சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சிவலிங்க யோக கேந்திரா நிலையத்தி னால் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலய மஹோற்சவ காலங்களில் தினமும் மாலை 5.30 மணி முதல் 6.30 மணி வரை சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று புதன் கிழமை பாவையர் வழிபாட்டில் பத்தினி எனும் விடயம் பற்றி சைவப் புலவர் நித்திய தசிதரனும் நாளை வியாழக்கிழமை எங்கும் எதிலும் சக்தி எனும் விடயம் பற்றி காரை எம்.பி. அருளானந்தம் சுந்தரமூர்த்தி நாயனாரின் பக்தி நெறி எனும் விடயம் பற்றி மு.குமாரசாமி ஆகியோரும் சொற்பொழிவாற்றவுள்ளனர். (ஓ-4)

## உத்தரிய அன்னை ஆலய திருவிழா

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி உத்தரிய அன்னை ஆலய நிறைவு நாள் திருப்பலியில் இன்று புதன்கிழமை மாலை திருச்செபமாலையும், நற்கருணை ஆராதனையும் நாளை வியாழக் கிழமை காலை திருவிழாத் திருப்பலியும் திருச் செரூப பவனியும் ஆசிரும் இடம்பெறும். (ஓ)

# வவுனியா நகர சபைத் தேர்தலில் ஐ.தே.க.வெற்றி பெறுவது உறுதி

## ஐ.தே.க வின் தேர்தல் பிரசாரக்குழுச் செயலாளர் ரோஹன கமகே

(கொழும்பு)

ஆயுத கலாசாரமும் அரச பயங்கரவாத மும் தோற்றுவிக்கப்பட்டுள்ள வவுனியாவில் சுதந்திரமான தேர்தல் நடவடிக்கைகளுக்கான சூழல் மறுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தேர்தல் கண்காணிப்பாளர் களுக்கான அனுமதியும் மறுக்கப்பட்டுள்ளமை பாரதூரமான விடயமாகும்.

இது ஜனநாயகத்தையே கேள்விக்குள் ளாக்கியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது .

வாழவே வழியில்லாத நிலையில் மூன்று இலட்சம் மக்களை முகாம்களுக்குள் முடக்கி வைத்துக் கொண்டு அந்த மக்களுக்கு தேவையே இல்லாத தேர்தல் ஒன்றை திணித்திருப்பதன் நோக்கம் தான் என்ன? அடைத்து வைக்கப் பட்டுள்ள மக்களின் சுதந்திரமும் அவர்களது நிம்மதியான வாழ்க்கையும் ஐக்கிய தேசியக்கட்சி யின் வெற்றியின் மூலம் உறுதி செய்யப்படும் என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட் டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே வவு னியா தேர்தல் பிரசாரக் குழுவின் செயலாள ரும் வட மத்திய மாகாண சபை உறுப் பினரு மான ரோஹன கமகே மேற்கண்டவாறு தெரி வித்தார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில் ,

வவுனியாவைப் பொறுத்தவரையில் அங்கு இப்போது தேர்தல் ஒன்று நடத்தப்படுவது அவ சிய மற்றது. முகாம்களுக்குள் அடைத்து வைக் கப்பட்டுள்ள அந்த மக்களிடம் வாக்குகளைப் பெறுவதை விட அவர்களுக்கு செய் ய வேண் டிய காரியங்கள் பல உள்ளன. சுதந்திரமே இல் லாத மக்களிடத்தில் சென்று தேர்தல் பிர சாரம் செய்து வாக்குப்பெற்று அதனை அர சியலாக்குவது மிக மோசமான விடயம்.

எவ்வாறாயிருப்பினும் நடத்தப்படுகின்ற தேர்தலில் போட்டியிடுவது ஜனநாயகத் துக்கு உட்பட்டதாகும். ஆனாலும் நாம் மதிக் கின்ற ஜனநாயகம் வவுனியாவில் இல்லை .

இதனைக் கண்காணிப்பதற்கே கண் காணிப்புக்குழுவின அவசியத்தையும் வலி யுறுத்தினோம். ஆனால் அரசாங்கத்தினால் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கபட்ட அதே வேளை கண்காணிப்புக்குழுவின் வவுனியாவுக்கான அனுமதியையும் அரசு மறுத்துள்ளமை பார தூர மான விடயமாகும்.

அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட் டிருப்பதை வவுனியா மக்கள் நன்றாக உணர்ந்துள்ளனர்.

இந்நிலையில் ஐக்கிய தேசியக்கட்சியை யும் மக்கள் நன்றாக புரிந்து கொண்டுள் ளனர். எனவே தேர்தல்களில் வவுனியா மக் கள் அரசுக்கு தகுந்த பாடம் கற்பிக்க விருக் கின்றனர்.

அடக்கி ஒடுக்கப்பட்டுள்ள மக்களை சுதந் திரமாக வாழ வைப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சி நிச்சயமாக வவுனியா நகர சபைத்தேர் தல்களில் வெற்றி பெறுவது உறுதி என்றார். (ஓ-4)

## 45ஆம் நாள் நினைவு அஞ்சலி

கடந்த 31.05.2009 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது கல்லூரியின் மாணவன்


**தேவராசா கீர்த்தீபன்** அவர்களுக்கு

கல்லூரி சமூகம் சார்பில் எமது அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்வதுடன்,அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக் கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைப் பகிர்ந்து கொள்வதுடன் அன் னாரின் ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கின்றோம்.

கூட்டுறவு நலன்புரிச் சங்கம்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

(சி/2809)

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர்

## கந்தையா மருதவாணர்

(A.M.T நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமையாளர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 | 01 |
| 11 | 07 |
| 1941 | 2009 |

கடந்த 01.07.2009 இல் சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் இறுதிப் பயனத்தில் கலந்து கொண்ட வர்களுக்கும், தந்தி,தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்கிய A.M.T ஸ்தாபனத்திற்கும் எமது மனமார்ந்த நன்றி களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை 16.07.2009 பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

314, கோவில் வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்.

## பாகிஸ்தானில்

# மதப் பாடசாலையில் குண்டுவெடிப்பு

# 15 பேர் பலி ; 70 பேர் காயம்

(பஞ்சாப்)

பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தில் மதப் பாடசாலை யொன்றில் இடம்பெற்ற பாரிய குண்டு வெடிப்பில் 7 சிறுவர்கள் உட்பட 15 பேருக்கும் அதிகமானோர் பலியான



துடன் குறைந்தது.70 பேர் காயமடைந்துள்ளனர்.

கனீவல் மாவட்டத்தில் சன்னு என்னும் இடத்தில் மதப் பாட சாலையாக செயற்பட்டு வந்த ஆசிரியர் ஒருவரின் வீட்டில் களஞ்சியப் படுத்தப் பட்டிருந்த வெடிபொருட்கள் வெடித்ததால் அப்பாடசாலையும் அதற்கு அண்மையிலுள்ள சுமார் 25 வீடுகளும் சேதமடைந்துள்ளனர்.

சேதமடைந்த வீடுகளின் இடிபாடுகளின் கீழ் மேலும் பலர் புதையுண்டிருக்கலாம் என அஞ்சப்படுவதாகவும் தொடர்ந்து மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் இறந்தவர்கள் தொகை மென்மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இக்குண்டு வெடிப்பையடுத்து சம்பவத்தில் இடத்திற்கு அண் மையிலுள்ள மருத்துவமனைகள் அனைத்திலும் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

பாடசாலை ஆசிரியர் நியாஸ் அலியின் வீட்டில் களஞ்சியப்படுத்தப்பட்ட மேற்படி வெடி பொருட்கள் திடீரென வெடித்தமைக்கான காரணம் எதுவென கண்டறியப்படவில்லை.

குண்டு வெடிப்பையடுத்து 40 அடி அகலமும் 8 அடி ஆழமுமான பாரிய பள்ளமொன்று சம்பவ இடத்தில் ஏற்பட்டுள்ளது.

இதன் போது பாரிய தீப்பிழம்பு ஏற்பட்டதாகவும் பூமியதிர்ச்சி ஏற்பட்டது போன்று நிலத்தில் அதிர்வு ஏற்பட்டதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

மேற்படி வெடிபொருட்கள் வீட்டில் புதைத்து வைக்கப்பட்ட நிலையில் வெடித்திருக்கலாம் என கருதுவதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும் மேற்படி மதப் பாடசாலையின் இடிபாடுகளிலிருந்து இறுவட்டுகள் மற்றும் ஒலி நடாக் களைக் கொண்ட பெட்டியொன்றை மீட்டதாகவும் அந்த ஒலி நாடாக்களில் பல தடை செய்யப்பட்ட லஷ்கர் ஈஜன்க்வி குழுவிடன் தொடர்புடைய மதத் தலைவர்களின் போதனைகளை உள்ளடக்கியிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ஓ-4)

# அமெரிக்க ஆலோசனை குழுவுக்கு இந்தியாவைச் சேர்ந்த கோஸ்லா தெரிவு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஆலோசனைக் குழு உறுப்பினராக இந்தியாவைச் சேர்ந்த பிரதீப் கோஸ்லா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ரோபோ தொழில் நுட்பத்தில் சர்வதேச அளவில் பிரபலமானவர் பிரதீப் கோஸ்லா. இவர் கரக்பூர் ஜஜடி -யில் பயின்று அமெரிக்காவில் பணியாற்றி வருகிறார்.

அமெரிக்காவின் மிக உயரிய ஆலோசனைக் குழுவில் பல் கலைக் கழக வேந்தர்கள், தொழிலாளர் பிரதிநிதிகள் ஆகியோர் இடம் பெறுவர் . இவர்கள் தற்போது சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள பொருளா தார தேக்க நிலையை ஆய்வு செய்து போட்டிகளை எவ்விதம் எதிர் கொள்வதை என்பது குறித்து இக்குழுவினர் ஆராய்ந்து அரசுக்கு ஆலோசனை வழங்குவார்.

தற்போது கார்நெஹி மேலோன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் கோஸ்லால் இக் குழுவில் இடம்பெற்ற மிக முக்கிய மானவர்களில் ஒருவர் என குழு வில் உத்திகள் வகிக்கும் பிரிவின் தலைவர் பெப்ரோ வின்ஸ்-ஸ்மித் தெரிவித்தார்.

வோஷிங்டனை தலைமையிடமாகக்கொண்டு செயற்படும் இந்த கவுன்சில் தற்போது நிலவும் பொருளாதார தேக்க நிலையிலிருந்து அமெரிக்கா எவ்விதம் முன்னேறுவது என்பது குறித்து ஆராய்ந்து அரசுக்குஆலோசனைகளை வழங்கும்.

தொழில் நுட்பத் துறையில் வேலை வாய்ப்பு மற்றெந்த துறைகளை விட 90 சதவீதம அதிகமாக வளர்ந்துவருவதாக இக்குழுவினர் குறிப்பிட்டுள்ளனர்.

சைபர் செக்யூரிட்டி தொடர்ப ான ஆய்வுப் பணி யில் கார்னெஹி பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிப்பிரிவை ஏற்படுத்தியவர் கோஸ்லாவாகும்.

# தைவானில் நில நடுக்கம்

(தைவான்)

தைவான் நாட்டின் கிழக்கு பகுதியில் நேற்று அதிகாலை இரண்டு முறை அடுத்தடுத்து நில நடுக்கம் ஏற்பட்டது.

நில நடுக்கம் சில வினாடிகள் நீடித்தது. வீடுகள் குலுங்கின.

தூங்கிக் கொண் டிருந்த மக்கள் அலறியடித்தபடி தெருவுக்கு ஓடி வந்தனர்.

சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை. நிலநடுக் கத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து இதுவரை எந்த தகவலும் கிடைக்க வில்லை என தெரிவிக்கப் படுகின்றது.

(ஓ-4)


கோண்டாவில் கிழக்கு

## ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம் நன்றி நவிலல்

"ஸ்ரீ தட்சிணாமூர்த்தி வழிபாடு" என்ற நூல் வெளியீடு தொடர்பாக 11.07.2009வரை வழங்கப்பட்ட அன்பளிப்புத் தொகை ரூபா ஒரு லட்சத்து ஐயாயிரத்து ஐந்து (1,05,005/-)11.07.2009 அன்று நல்லை ஆதினத்தில் துயர் துடைப்பு நிதிக்கு வழங்கப்பட்டது.

தொண்டொன்று செய்தீர் தூயோரே!
துயர் தீர்க்க உதவிய பெரியோரே!
நன்றே செய்த அன்பு உள்ளங்களே!
நம் ஆசிமடத்தின் நன்றி உமக்கே!

வெளியீட்டாளர்கள்

(2955)



## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்

1. பிரதான உணவகம், திருநெல்வேலி.
2. பாலசிங்கம் பெண்கள் விடுதி உணவகம், திருநெல்வேலி.
3. ஆனந்தக்குமாரசாமி ஆண்கள் விடுதி உணவகம், திருநெல்வேலி.
4. இராமநாதன் நுண்கலைக்கழக உணவகம், மருதனார்மடம்.
5. மருத்துவபீட உணவகம், திருநெல்வேலி.
6. சித்தமருத்துவத் துறை உணவகம், கைதடி

ஆகிய உணவகங்களை நடத்துவதற்கு யாழப்பாணப் பல்கலைக் கழக பதிவாளரினால், 28-07-2009 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் தனித்தனியாக ஏற்றுக் கொள்ளப் படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணமாக ரூபா 1000/- உம் மீளளிக் கப்படாத கட்டணமாக ரூபா 200/- உம் ஒவ்வொரு உணவகத்திற்கும் தனித்தனியாக பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ள லாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும். ஒவ்வொரு தனித்தனி விண்ணப்பத்திற்கும் அதற்குரிய உணவகத்தின் பெயர் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் நலச்சேவைகள் கிளையில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி -281)



## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகம் கரவெட்டி கேள்வி அறிவித்தல்

01.வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகத்தினால் கீழே குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்வி கோரப்படுகின்றது.

| தொ.இல | ஒப்பந்த குறியீட்டு இல | வேலை விபரம் | இக்ராட் தரம் | கேள்வி பிணை தொகை | மீளளிக்கப் படாத கட்ட ணம் |
|---|---|---|---|---|---|
| 01 | JF/ADP/MRISEP/01 | பொதுச்சேவை நிலையம் அமைத் தல் வதிரி பாதணி கைத்தொழில் நிலையம் | C 8/m7 | 50,000.00 | 1,000.00 |

02.கேள்வி அறிவித்தல் தொடர்பில் பின்வரும் தகைமைகளை சகல கேள்வி தாரர்களும் கொண்டிருக்க வேண்டும்.

i.மேற்கூறிய அட்டவணையின் பிரகாரம் குறிப்பிட்ட ICTAD தரத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

ii.ICTAD அறிவித்தலுக்கமைய மேற்படி வேலை தொடர்பில் போதிய கேள்வி தகவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iii.முன்னைய வேலைகளில் மோசமான , நேர்மையற்ற வெளிப்பாடுகளை கொண்டிருத்தல் கூடாது.

iv.ஒப்பந்தக்காரர் புதுப்பித்த தகவுப் பதிவுப் புத்தகத்தை கேள்வி ஆவணங்கள் பெற முன்னர் ஒப்படைக்க வேண்டும்.

v.கேள்விதாரர் VAT பதிவு செய்ததன் பிரதியையோ அல்லது VAT பதிவு செய்யப்படாமைக்கான கடிதத்தை ஆணையாளர் , உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும்.

03. ஆர்வமுள்ள கேள்விதாரரும் ,அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களும் மேலதிக விபரங்களையும் கேள்வி ஆவணங்களையும் இலவசமாக திட்டமிடல் கிளை , பிரதேச செயலகம் ,கரவெட்டியில் பரிசீலிக்க முடியும். (தொடர்பு இல. 021 2263258 ,021 2264674

04.கேள்வி ஆவணங்களை 15.07.2009 தொடக்கம் 30.07.2009 காலை 10மணி வரை மீளளிக்கப்படாத கேள்வித்தொகையை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதேச செயலகம் ,கரவெட்டியில் செலுத்தி விண்ணப்பப்படிவங்களை திட்டமிடல் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

05.மூடிய கேள்விகளை தலைவர் கேள்விச்சபை பிரதேச செயலகம்த கரவெட்டி என்னும் முகவரிக்கு 31.07.2009 ம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைப்பதுடன் உடனடியாக கேள்வி திறக்கப்படும் இந்த நேரம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவர் சார்பில் உரித்தளிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.

06.மேற்படி கேள்வி தயாரித்தல் அனுப்புதல் தொடர்பில் ஏற்படும் எந்த செலவீனங்களுக்கும் தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

சி.சத்தியசீலன்
தலைவர் ,பிரதேச செயலக
கேள்விச் சபை, பிரதேச செயலகம்,
கரவெட்டி.

பிரதேச செயலகம்,
கரவெட்டி.

(சி/2810)

# வடக்கின் வசந்தம் நடமாடும் சேவையில் 3 ஆயிரம் மாணவர்களுக்கு அடையாள அட்டைகள்

## முகாம்களில் அஞ்சல், தொலைத் தொடர்பு வசதிகளை விஸ்தரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் சனி, ஞாயிறு தினங்களில் நடத்தப்பட்ட இரண்டு நாள் நடமாடும் சேவையில் அஞ்சல் தொலைத் தொடர்பு திணைக்களத்தினால் மூவாயிரம் பாடசாலை மாணவர்களுக்கு அஞ்சல் திணைக்களத்தின் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக அஞ்சல் தொலைத் தொடர்பு அமைச்சின் பிரதி அமைச்சர் எம்.எஸ். செல்லச்சாமி தெரிவித்தார்.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடபகுதியின் அபிவிருத்திக்காகவும், அந்தப் பிரதேசத்தில் அரச சேவைகளை மேம்படுத்துவதற்காகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அறிமுகப்படுத்தப்பட்ட வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இந்த நடமாடும் சேவை நடத்தப்பட்டதாகத் தெரிவித்த பிரதி அமைச்சர் செல்லச்சாமி, பொதுமக்கள் எதிர் நோக்கிய தொலைத் தொடர்புதுறை சார்ந்த பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இடம்பெயர்ந்து வந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களின் வசதி கருதி 30 தொலைபேசிகள் அம் முகாம்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் 25 தொலைபேசிகளை வழங்க தொலைத் தொடர்பு திணைக்களம் முன்வந்துள்ளது.

இடம்பெயர்ந்துள்ள மக்கள் தமது உறவினர்களுடன் தொடர்பு கொள்வதற்கு வசதியாகவும் அஞ்சல் நிலையங்களின் ஊடாக பல்வேறு சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும் இடைத் தங்கல் முகாம்களில் 3.4 மில்லியன் ரூபா செலவில் 8 அஞ்சல் அலுவலகங்கள் அமைக்கப்பட்டு முழு அளவிலான தபால் சேவைகள் நடைபெற்று வருகின்றன.

வன்னிப் பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள அஞ்சல் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் ஊழியர்கள் அடங்கிய சுமார் 200 பேர் இடம்பெயர்ந்த நிலையங்களில் உள்ள அஞ்சல் அலுவலகங்களில் பணியாற்றி வருகின்றனர். இவர்களுக்கு 56 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

இங்கு 136 பேர் தபால் விநியோக உத்தியோகத்தர்களாக பணியாற்றுகின்றனர். முகாம்களில் உள்ளவர்களுக்கு வரும் கடிதங்களை இவர்கள் தினசரி விநியோகம் செய்து வருகின்றார்கள். அவர்களுக்கான சீருடைகளும் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் வவுனியா-பெரியார்குளம் பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க, அங்கு ஓர் உப - அஞ்சல் அலுவலகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ஓ-4)

# 'கொலராடோ கப்பல்' நிவாரணப் பொருட்களை பொறுப்பேற்றதும் துரிதகதியில் விநியோகிக்கப்படும்

## இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

'கொலராடோ' கப்பல் மூலம் இலங்கை துறைமுகத்திற்கு வந்தடைந்துள்ள நிவாரணப் பொருட்களை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் இதுவரையிலும் உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்கவில்லை.

அப்பொருட்களைப் பொறுப்பேற்று ஒரு வாரத்திற்குள் முகாம்களில் உள்ள மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்காக புலம்பெயர்ந்த தமிழர்களால் சேகரித்து 'வணங்காமண்' கப்பல் மூலம் அனுப்பப்பட்ட நிவாரணப் பொருட்களை இந்திய செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்று கொலராடோ கப்பல் மூலம் அந்த பொருட்களை கொழும்பு துறைமுகத்திற்கு அனுப்பியுள்ளது.

அப்பொருட்களை நாங்கள் உத்தியோக பூர்வமாக கையேற்றதன் பின்னர் முகாம்களில் உள்ள மக்களுக்கு அதனைத் துரித கதியில் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

யுத்த நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட இலங்கை தமிழர்களுக்காக பிரித்தானியாவிலுள்ள புலம்பெயர்ந்த தமிழர்களால் சேகரிக்கப்பட்ட 650 மெற்றிக்தொன் நிவாரணப் பொருட்கள் கெப்டன் அலி எனப்படுகின்ற வணங்காமண் கப்பல் மூலம் இலங்கைக்கு வந்தபோது இலங்கை அரசு அதனை திருப்பி அனுப்பியது.

பின்னர் இந்திய அரசின் வேண்டுகோளின் படி அந்த நிவாரணப் பொருட்களை இலங்கை அரசு பொறுப்பேற்க இணக்கம் தெரிவித்திருந்தது.

அதன்படி அந்த நிவாரணப் பொருட்களை இந்திய செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்று கொலராடோ கப்பல் மூலம் இலங்கைத் துறைமுகத்திற்கு அனுப்பியுள்ளது.

இவ்வாறு கொலராடோ கப்பல் மூலமாக பாரிய 27 கொள்கலன்கள் மூலம் அனுப்பப்பட்டுள்ள நிவாரணப் பொருட்களை நாம் உத்தியோகபூர்வமாக கையேற்று வெகுவிரைவில் வவுனியா முகாம்களில் உள்ள பொது மக்களுக்கு பகிர்ந்தளிப்போம் என்றார். (ஓ-4)

# 'ஒளிரும் வடக்கு' கடன் திட்டம் ஜனாதிபதியினால் அறிமுகம்

(கொழும்பு)

வடக்கு மாகாண அபிவிருத்திக்காக இலங்கை மத்திய வங்கியினால் ஒளிரும் வடக்கு எனும் விசேட கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த விசேட திட்டத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த திங்கட்கிழமை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

அலரிமாளிகையில் நடைபெற்ற அரச மற்றும் தனியார் நிதி நிறுவனங்களின் முக்கியஸ்தர்களுடனான முக்கிய சந்திப்பின் போதே இந்த திட்டத்தை ஜனாதிபதி ஆரம்பித்து வைத்து உரையாற்றினார். ஜனாதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக தற்போதுள்ள வங்கி நடைமுறையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். விசேடமாக சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக துறைகளை கட்டியெழுப்புவதற்கு ஏற்புடைய வேலைத் திட்டங்களுக்கு அரச மற்றும் தனியார் நிதி நிறுவனங்களின் ஒத்துழைப்பு அத்தியாவசியமானதாகும்.

வடக்கு மாகாணத்திற்கு விவசாயம், விலங்குவளர்ப்பு, கடற்றொழில் உள்ளிட்ட பொருளாதார நடவடிக்கைகளை மீண்டும் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்கு முதலீடு செய்யும் வகையிலேயே இந்த விசேட கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட நாட்டில் சமாதானமான சுற்றுச் சூழலை ஏற்படுத்தி எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவதே எனது நோக்கமாகும்.

அபிவிருத்தி நாட்டிற்குள் இடைவிடாது முன்னெடுக்கப்படல் வேண்டும். அதற்காக சகல நிதி நிறுவனங்களும் ஒத்துழைப்பு நல்கும் என்று எதிர்பார்க்கின்றேன். (ஓ-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கீழ்க்காய் நெல்லி

Botanical Name - Phyllanthus nuriri
Family - Euphorbiaceae
Sing - Bimnelli


30 செ.மீ உயரம் வரை வளரும் ஒரு பருவ குறுஞ் செடியாகும் ; செங்குத்தாகவோ அல்லது தரைமீது படர்ந்தோ காணப்படும் ; இலைகள் முட்டை வடிவின ; மலர்கள் இலைக் கோணத்தில் அமைந்தவை ; ஒரு பாலின ; மஞ்சள், பச்சை அல்லது வெள்ளை நிறம் கொண்டவை ; ஆண்மலர் 1-3 ஆணும், பெண் மலர்கள் தனித்தும் காணப்படும். கனிகள் அமுக்கப்பட்டும் கோண வடிவினதாயும், சமபரப்புடையதாகவும் காணப்படும் விதைகள் மூன்று முகம் கொண்டவை ; செம்பழுப்பு நிறம் உடையவை. 6-7 வரிகள் காணப்படும்.

### பரம்பலும், இனவிருத்தியும்

இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளைச் சார்ந்த இச் செடியானது நாட்டில் [illegible] பகுதிகளில் காணப்படும். யாழ்ப்பாணத்தில் பொதுவாக பரம்பிக் காணப்படும். விதைகள் மூலம் இனவிருத்தி அடையும்.

### மருத்துவப் பயன்கள்

- இதன் முழுச் செடியையும் நீரில் சுத்தம் செய்து நீர் விடாமல் அரைத்து நெல்லிக்காயளவு பசும் மோரில் கலந்து சாப்பிட வேண்டும். இது காமாலை நோய்க்கு கைகண்ட மருந்தாகும்.
- இலைகளை தனியாக பறித்து அரைத்து ஒரு எலுமிச்சம் காயளவு எடுத்து மோரில் கலக்கி காலையில் ஒரு வேளை சாப்பிட சிறுநீர் எரிச்சல், வெள்ளை சாய்தல் முதலியன நீங்கும்.
- வாரத்திற்கு இருமுறை இதன் இலைகள் சிறிதளவு எடுத்து அரைத்துப் பாலோடு சேர்த்தோ அல்லது நீரிலோ கொடுத்து வர குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்று மந்தம், கல்லீரல், மண்ணீரல் வீக்கத்தை தணிக்கும்.
- நாட்பட்ட சுரங்களுக்கு கீழ்க் காய்நெல்லி இலை ஒரு பங்கும் மிளகு அரைப் பங்கும், வெள்ளைப் பூண்டு அரைப்பங்கும் சேர்த்து நன்றாக அரைத்து மிளகளவு மாத்திரைகளாக்ச் செய்து கொண்டு காலை, மாலை வேளைகளில் வெந்நீரில் உரைத்துக் கொடுக்கலாம்.
- கீழ்க்காய் நெல்லி இலையை போதுமான அளவு அரைத்து உடம்பில் தேய்த்துக் குளித்து வர உடலில் ஏற்படும் அரிப்பு, சிறுபுண்கள் நீங்கிவிடும்.
- கீழ்க்காய் நெல்லியை நிழலில் உலர்த்தி



தூள் செய்தும் அல்லது இலையை இடித்து சாறு பிழிந்தும் தைலங்கள் தயாரிக்கலாம்.
- இலையின் சாறு 300 மில்லியோடு நாம் தலைக்கு தேய்க்கும் வழக்கமான எண்ணெய் 600 மில்லி சேர்த்து காய்ச்சி நீர் சுண்டியதும் வடித்து வைத்துக் கொண்டு குளிப்பதற்கும், தலைக்கு தேய்ப்பதற்கும் பயன்படுத்தலாம். இதனால் உடல் உஷ்ணம் தணிந்து, பித்த நோய்கள் தீரும்.
- இரத்த சோகை நோயிற்கும், இரத்தத்தை விருத்தியடையச் செய்வதற்கு கீழ்க் காய் நெல்லிச் சமூலத்தை பாலில் அரைத்து பாலில் கலக்கி கொடுக்க வேண்டும்.
- சாம்பல், மண் போன்றவற்றை உண்ணும் குழந்தைகட்கு கீழ்க் காய் நெல்லி வேர், கடுக்காய்த் தோல், மிளகு இலைகளை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து குழந்தையின் வயதிற்கும், உடல் அமைப்புக்கும் தக்கவாறு புளித்த மோரில் அரைத்து கலக்கி தொடர்ந்து ஒரு வாரம் கொடுக்கவும். அடிக்கடி கொடுத்தால் நிச்சயமாய் குழந்தைகள் மண்தின்பதை நிறுத்திக் கொள்ளும்.
- கீழ்க்காய் நெல்லிச் செடியை வேருடன் பறித்து வந்து கழுவிவிட்டு வேர், இலைக்காம்பு இலைகளில் கைப்படியளவு எடுத்து அம்மியில் வைத்து நைத்து ஒரு சட்டியில் போட்டு 9 மிளகையும் தட்டிப்போட்டு 2 டம்ளர் தண்ணீர் விட்டு ஒரு டம்ளர் அளவிற்கு வற்றவைத்து, வடிகட்டி அதை 3 பங்காக்கி வேளைக்கு ஒரு பங்கு வீதம் காலை, பகல், மாலையாக 3 நாள் சாப்பிட்டால் தேக எரிச்சல் நீங்கும்.
- ஆய்ந்து எடுத்த கீழ்க்காய் நெல்லியிலை, பொன்னங்காணி, மூக்கிரட்டை இலைகளை சம அளவாக எடுத்து அம்மியில் வைத்து மைபோல அரைத்து நெல்லிக்காயளவு விழுதை வாயில் போட்டு நீராகாரம் சாப்பிட வேண்டும். இவ்வாறு 7 நாட்கள் சாப்பிட்டாலும் காமாலை நோய் தீரும்.
- தேக அரிப்பு நீங்க கீழ்க்காய் நெல்லியிலைகளை மட்டும் ஆய்ந்து, எடுத்து அம்மியில் வைத்து சிறிதளவு உப்புச் சேர்த்து மை போல இல்லாமல் சிறிது சொரசொரப்பாக அரைத்து உடலில் பூசி வைத்து 15 நிமிடங்கள் ஊறிய பின் வெந்நீரில் குளிக்க வேண்டும். இந்த விதமாக 3 நாட்கள் செய்தால் தேக அரிப்பு நீங்கும்.
- இச் செடியின் இளங்கொழுந்துகளை குடிநீரிட்டு சீதக் கழிச்சலுக்கு கொடுக்கலாம்.
- கீழ்க் காய் நெல்லியை நன்றாக மைபோல அரைத்து சதைச் சிதைவுகட்கு பற்றிடலாம்.
- இலையையும், வேரையும் உலர்த்திப் பொடித்து கழுநீரில் குழைத்து புண்புரைகளுக்கும் வீக்கங்களிற்கும் பூசலாம்.
- இலையையும், வேரையும் குடிநீரிட்டு சூட்டோடு 30 மில்லி வீதம் காலை, மாலை கொடுக்க காய்சச்சல் தணியும்.
- இக்குடிநீரையே ஆறிய பின்பு குடித்து வர உடல் வலுக்கும், பசியைத் தூண்டும். சிறுநீர் நன்கு வெளிப்படும்.

### கீழ்க் காய் நெல்லித் தைலம்

கீழ்க் காய் நெல்லியை நிழலிலுர்த்தி இடித்து எடுத்த தூள் 700 கிராம் அதற்கு 8 பங்கு நீர் சேர்த்து காய்ச்சி 1/8 பங்கை குறுக்கி இதில் பசுவின் பால் 700 மில்லி, நல்லெண்ணெய் 700 மில்லி சேர்த்து, 30 கிராம் சீரகத்தைப் பசுவின் பால் விட்டு அரைத்து சேர்த்து காய்ச்சி, பதத்தில் வடித்து கொண்டு வாரம் இரு முறை தலை முழுகிவர உட்சுரம், கை, கால், கண் எரிச்சல், தலைச்சுற்றல், பித்த மயக்கம் தீரும்.

### தேகபலமுண்டாக

கீழ்க்காய் நெல்லிச் செடியை நிழலுலர்த்தி இடித்து சூரணித்து வைத்துக் கொள்ளவும். இத்துடன் தேற்றன் கொட்டை (தமிழ் மருந்துக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம்) 70 கிராம் எடுத்துப் பசும்பாலில் வேகவைத்து எடுத்து நன்றாக அலம்பி கல்லுரலில் போட்டு சூரணமாக இடித்து வைத்துக் கொள்ளவும்.

கீழ்க்காய் நெல்லிச் சூரணம் 2 தேக்கரண்டி வீதமும், தேற்றன்கொட்டைச் சூரணம் அரை தேக்கரண்டி வீதமும் எடுத்து, 350 மில்லி தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து கால் பாகமாக வற்ற வைத்து வடிகட்டி, 175 மில்லி காய்ச்சிய பசும்பாலில் கலந்து, சிறிது சீனியும் சேர்த்து தினமும் காலையில் அருந்தி வர தேகபலமும், நல்ல அழகுமுண்டாவதைக் காணலாம்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

பெரும்பாடு நோய் நீங்க கீழ்க்காய் நெல்லி வேர் 20 கிராம், நாவல் பட்டை 20 கிராம் இவ்விரண்டையும் மைபோல அரைத்து, 350 மில்லி புளித்த மோரில் கலந்து அத்துடன் புதிதாக அரைத்தெடுக்கப்பட்ட சந்தனம் 5 கிராம் போட்டுக் கலக்கி தினமும் காலையில் பருகிவர குணமாகும். நோய் நீங்கும் வரை சாப்பிட வேண்டும்.

# இந்தியாவை பார்த்தாவது இலங்கை மனிதாபிமானத்தை கற்றுக்கொள்ள வேண்டும்

## தமிழக மீன் வளத்துறை அதிகாரி தெரிவிப்பு

(தூத்துக்குடி)

எல்லை தாண்டி பிரவேசிக்கும் இலங்கை மீனவர்களை இந்திய கடலோர காவல் படையினர் எவ்வாறு நடத்துகின்றனர் என்பதைப் பார்த்தாவது இலங்கை மனிதாபிமானத்தை கற்றுக்கொள்ள வேண்டும் என தமிழக மீன்வளத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தனுஷ்கோடி அருகே நடுக் கடலில் படகு பழுதாகிய நிலையில் ஆறு நாட்களாக தத்தளித்துக் கொண்டிருந்த இலங்கை மீனவர்கள் ஐந்து பேரை இந்திய கடலோர காவல் படையினர் மீட்டனர்.

மேற்படி மீனவர்கள் படகு பழுதானதால் கடல் நீரோட்டத்தில் இழுபட்டு கடந்த 5 ஆம் திகதி தனுஷ்கோடி அருகேயுள்ள இந்திய கடல் பகுதியை அடைந்துள்ளனர்.

இதனையடுத்து 10ஆம் திகதி வரை நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த மீனவர்கள் குறித்த தகவலை இலங்கை தூதரகம் மூலம் அறிந்த இந்திய கடலோர காவல்படையினர் அவர்களை மீட்டுள்ளனர்.



பின்னர் மீனவர்கள் மீன் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் பட்டனர். படகு பழுது சரிசெய்யப் பட்ட பின் அவர்கள் இலங்கை செல்வர் என அதிகாரிகள் தெரிவித்தனர். இந் நிலையில் இச்சம்பவம் குறித்து தூத்துக்குடி மீனவர்கள் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், இந்திய கடலில் தத்தளித்த சிங்கள மீனவர்களை நமது கடலோர காவல்படை மனிதாபிமானத்தோடு மீட்டு முதலுதவி செய்து உணவுதந்துள்ளது. ஆனால் இராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் கச்சதீவு அருகே இந்திய கடலில் மீன் பிடித்தாலும் கூட இலங்கை கடற்படை அம் மீனவர்களை சரமாரியாகத் தாக்கி துன்புறுத்தி அந்நாட்டுச் சிறையில் அடைத்து விடுகின்றனர். சிலநேரம் சுட்டுக்கொன்றும் விடுகின்றனர். இந்திய கடற்படையினர் நடந்து கொள்ளும் விதத்தைப் பார்த்தாவது, இலங்கை கடற்படை மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என்றார். (ஓ-4)

## தமிழை நீதிமன்ற மொழியாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

இந்திய கலாசார நட்புறவுக் கழக மாநில மாநாட்டில் தீர்மானம்

தமிழை நீதிமன்ற மொழியாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய கலாசார நட்புறவுக் கழக மாநில மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்திய கலாசார நட்புறவுக் கழகத்தின் தமிழ் மாநில மாநாடு மதுரை அரசடி இறையியல் கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மாநாட்டுக்கு தொழில் அதிபர் கருணாகரன் தலைமை தாங்கினார்.

தமிழை நீதிமன்ற மொழியாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைவருக்கும் கட்டாய இலவச கல்வி அளிக்க வேண்டும். தமிழக மீனவர்களை பாதுகாக்க அவர்களது வாழ்வுரிமைக்கு உதவ வாதம் அளிக்கவும் மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுப்பதுடன் கச்சதீவு மீதான தமிழக மக்களின் உரிமை களை நிலை நாட்ட வேண்டும் என்ற தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. -(ஓ-4)

## தமிழக கோவில்களில் பெண் அர்ச்சகர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(சென்னை)

அரசின் கண்காணிப்பில் உள்ள கோவில்களில் பெண் அர்ச்சகர்களை நியமிப்பது பற்றி விரைவில் முடிவெடுக்கப்படும் என்று அறநிலையத்துறை அமைச்சர் பெரிய கருப்பன் தெரிவித்துள்ளார்.

சட்டசபையில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின்போது கோவில்களில் பெண் அர்ச்சகர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று காங்கிரஸ் எம். எல்.ஏ. காயத்திரிதேவி கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த பெரிய கருப்பன் கிராமங்களில் உள்ள தனியார் கோவில்களில் பெண்கள் பூசாரிகளாக பணிபுரிகிறார்கள். தேவைப்பட்டால் அரசின் கண்காணிப்பில் உள்ள கோவில்களிலும் பெண் அர்ச்சகர்களை நியமிப்பது பற்றி முதல்வரை கலந்தாலோசித்து முடிவெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-4)

# மரண அறிவித்தல்

மலர்வு 05 ❖ 06 ❖ 1965



உதிர்வு 09 ❖ 07 ❖ 2008

அமரர்

## சூசைப்பிள்ளை றெனியேட் அரியதாஸ்

(பொஸ்கோ)

அன்னார் சூசைப்பிள்ளை ஞானமலர் தம்பதியின் பாசமிகு மகனும், மதுரநாயகம் சௌபாக்கியம் தம்பதியின் மூத்த மருமகனும், மேரி ஹிறோமியின் (தங்கமலர்) அன்புக் கணவரும், ஜனிதா, வாசன் , ஜெரோச் , ஜெனிபர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரகாஸ் (கொழும்பு) , சாலா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், அன்ரன், ரோகினி, வதனி, குஞ்சக்கா, குண்டுமணி, காலஞ்சென்ற குமார், ரவி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற பாபு, ராஜன்(லண்டன்), பாலு (லண்டன்), செல்லக்கிளி, தங்கக்கிளி (லண்டன்), கிளி (கனடா), டயானா (லண்டன்) ஆகியோரின் அத்தானும், அருமை, செல்வம், முருகன், றொபின்சன் ஆகியோரின் மைத்துனரும், ஜெயந்தி , கிளியின், மச்சானும், இன்பன், நிமலன், மோகன், குலம், ஆகியோரின் சகலனும் யசோ, அன்ராணி ஆகியோரின் அண்ணனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.07.2009 இன்று முற்பகல் 10 மணிக்கு பொலிகண்டி குழந்தை யேசு ஆலயத்தில் திருப்பலி ஒப்புகொடுத்து வல்வெட்டித்துறை செபஸ்தியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
மதுரநாயகம்
(அளகர்)
பொலிகண்டி.


(2957)







நவாலியூர் மறைந்த சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் செ.சத்தீஷ் ஞாபகார்த்தமாக விசேட தேவை உடையவர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வில் மறைந்த சத்தீஷ் அவர்களது மறைவுக்கு அஞ்சலி செலுத்துவதனையும் , நவாலி வடக்கு கிராம அலுவலர் அ. தனபாலரத்தினம் அருட் தீபம் ஏற்றுவதையும் படங்களில் காணலாம்.






யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி வீர சங்கிலியன் விளையாட்டு மைதானத்தில் பீடாதிபதி எஸ்.கே.யோகராஜன் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்ட கரவெட்டிபிரதேச செயலர் எஸ். சத்தியசீலன், அவரது பாரியார் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட இ.ச.பேரம்பலம் நிறுவன முகாமையாளர் பி.நாகரத்தினம் ஆகியோருடன் விழாவில் கலந்துகொண்ட ஆசிரிய மாணவர்கள் நிற்பதையும், பிரதம விருந்தினர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# ஜனாதிபதிக்கு நித்தமும் புகழ் மாலை இராணுவ மயமாகிறது இலங்கை

**சிக்கலில் சிங்கள இராணுவம் ! நாட்டை இராணுவ மயமாக்கி வருகிறார் ராஜபக்ஷ என்ற தலைப்பில் விகடனில் வெளி வந்த கட்டுரை இங்கு பிரசுரமாகிறது. (ஆ-ர்)**



இனி எமது அகராதியில் முடியாது என்ற வார்த்தையே இல்லை என்று மகிழ்ச்சியுடன் சொல்லி வரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நித்தமும் புத்த விகாரைகளில் புகழ் மாலைகள் சூட்டப்படுகின்றன.

சிங்களப் படைவீரர்களுக்கு சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. உலகின் தர்ம துவீபம் என்ற விருதை நான் பெற்றுக்கொள்வதற்கான தகுதியை அடைந்து விட்டேன் என்கிறார் ராஜபக்ஷ.

அவருக்கும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் கொழும்பு பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கக் காத்திருக்கிறது.கொண்டாட்டங்களில் மஹிந்தவின் அலரி மாளிகை ஆனந்தத் தாண்டவம் ஆடுகிறது.

போரை முடிவுக்குக் கொண்டுவந்த முப்படைத் தளபதிகளுக்கும் நான்கு நட்சத்திர அந்தஸ்துப்பதவி உயர்வு கொடுக்கப்பட்டுள்ளது. இராணுவத் தளபதி லெப்ஜெனரல் சரத் பொன்சேகா ஜெனரலாகவும் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட அட்மிரலாகவும் விமானப்படைத் தளபதி ஏர்மார்சல் ரொசான் குணதிலக ஏர் சீஃப் மார்சலாகவும் பதவி உயர்வு செய்யப்பட்டனர்.

இதில் சரத் பொன்சோகவுக்கு அளவுக்கு அதிகமான முக்கியத்துவம் தருவதே மற்றைய இருவரும் விரும்பவில்லை. தரைப்படைத் தளபதி சரத் பொன்சேகாவும் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொடவும் ஆரம்பத்தில் இருந்து எதிரும் புதிருமான ஆட்கள் ஒருவருக்கொருவர் ஒத்துழைக்க மாட்டார்கள் என்பது பத்திரிகையாளர் வட்டாரத்துத் தகவல்.

'புலிகளை ஒடுக்குவது என்பது அவர்களுக்குக் கடல் பகுதியில் இருக்கும் ஆதிக்கத்தை அடக்குவது தான். இதைக் கடற்படை தான் செய்து காட்டியது. கடற்புலிகளின் 11ஆயுதக் கப்பல்களைக் கடந்த இரண்டு வருடங்களில் நாங்கள் தான் அழித்தோம். போரின் இறுதிக்கட்டத்தில் புலிகளின் ஒருவரைக்கூட கடல் எல்லை வழியாக தப்பிச் செல்ல விடாமல் தடுத்ததும் கடற்படையின் சாதனை தான்' என்று கடற்படைத் தளபதி பொங்குகிறார்.


எங்களுக்கு விமானப்படை தான் முழுமையான ஒத்துழைப்பு வழங்கியது என்று பாராட்டு தெரிவித்த சரத் பொன்சேகா கடற்படைக்கு பாராட்டுத் தெரிவிக்கவில்லை. யுத்தம் நடந்த காலம் முழுவதும் புலிகளுக்கு ஆயுதங்கள் வந்துகொண்டுதான் இருந்தன. கடைசியாக கடந்த டிசம்பரில் கூட ஆயுதங்களைக் கொண்டு வந்தார்கள் என்று சொல்கிறார் சரத்பொன்சேகா. இந்த ஏட்டிக்குப் போட்டிகள் இப்போதைக்கு முடிய வாய்ப்பில்லை. ஆனால் தனக்கு அடுத்து பொன்சேகா தான் என்பதை சட்டபூர்வமாக அறிவித்து விட்டார் மஹிந்தா இன்றைய சூழலில் இலங்கையின் நம்பர் டூ அந்தஸ்து அவருக்கு வந்துவிட்டது. எனவே அவர் வைத்தது தான் சட்டம்.

சரத்பொன்சேகாவின் முதல் திட்டம் இராணுவ வீரர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது . புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட இடங்களை தக்க வைக்க வேண்டுமானால் மொத்தம் 3இலட்சம் இராணுவவீரர்கள் அவசியம்.ஆனால் இன்று இரண்டு இலட்சம் பேர்தான் இருக்கிறார்கள். ஒரு இலட்சம் பேரை ஜனவரிக்குள் சேர்த்தாக வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.இராணுவத்திற்கு ஆள் சேர்ப்பு வேலை மும்முரமாக நடந்து கொண்டிருக்கிறது இலங்கை முழுவதும்.

கடந்த 4 ஆண்டு போரில் மட்டும் 5ஆயிரத்து 500 இராணுவ வீரர்கள் பலியானார்கள். சுமார் 20 ஆயிரம் வீரர்கள் உடல் உறுப்புக்களை இழந்து ஊனமானார்கள் சுமார் 10 ஆயிரம் பேர் இராணுவத்தை விட்டு ஓடியுள்ளார்கள். இவை தோராயமான புள்ளி விபரங்கள் தான். 2006 -2007 ஆண்டுகளில் சுமார்

## ஒரு யுத்தத்தில் தோற்றவர்களை விட வென்றவர்கள் தான் நிம்மதியாக இருக்கமாட்டார்கள்







2 ஆயிரம் பேரும் கடந்த ஆண்டு மூவாயிரம் வீரர்களும் இந்த ஆண்டு மே வரை 2ஆயிரம் பேரும் இறந்துள்ளார்கள். கடைசி நாளில் மட்டும் 800 வீரர்கள் பலியானார்கள் என்று அங்குள்ள பத்திரிகையாளர்கள் மத்தியில் பேச்சுள்ளது.

கண்ணி வெடிகளில் சிக்கி கால்களை இழந்தவர்கள் மீண்டும் இராணுவத்தில் இணைய முடியாது ஏன்பதால் அவர்களுக்கு ஓட்டோறிஷாக்களை வழங்கி மறு வாழ்வுக்கு ஏற்பாடு செய்துள்ளார் ஜனாதிபதி ராஷபக்ஷ.

கருணா தன்னுடன் உள்ளவர்களை இராணுவத்தில் இணைக்க முயற்சி எடுத்து வருகிறார். 540 பேருக்கு விண்ணப்பங்கள் வாங்கி கொடுத்துள்ளார். பழைய போராளிக்குழுக்களில் இருந்தவர்களும் விண்ணப்பித்து வருகிறார்கள். இவர்களை வைத்து தமிழ் இராணுவ படையணி அமைக்க சரத் பொன்சேகா திட்டமிட்டுள்ளார் என்று ஆர்வக்கோளாறாக கருணா சொல்லப்போக அப்படி எந்தத் திட்டமும் இல்லை என்று அடுத்த நாளே மறுத்துவிட்டார் கோத்தபாய.

இராணுவத்திற்கு ஆள் எடுத்து விவகாரத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் கடுமையாக எதிர்த்து வருகிறார்கள். நாடாளுமன்றத்தில் பேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் யுத்தம் முடிந்தாலும் அரசு யுத்த பீதியை தக்க வைத்துள்ளது. தற்போது யுத்தம் இல்லை. அரசாங்கத்தின் எதிரிகள் அழிந்துவிட்டார்கள் ஆனால் அரசிற்கு எதிரி ஒன்று தேவை என்ற நிலைப்பாட்டில் தான் அரசாங்கம் இருக்கிறது. ஒரு இலட்சம் பேரை இராணுவத்தில் சேர்க்கப்போவதாகச் சொல்கிறீர்கள். இதில் தமிழ், முஸ்லிம் சிறுபான்மையினர் எத்தனை பேர் இருப்பார்கள்? அல்லது முழுவதும் சிங்களவர்களைத் தான் சேர்த்துக்கொள்வீர்களா? என்று கேட்ட போது எந்தப்பக்கத்தில் இருந்தும் பதில் இல்லை.

இராணுவத்தை பரவலாக்கிக்கொண்டே போவது தமிழருக்கு மட்டுமல்ல சமாதானத்தை நேசிக்கும் ஜனநாயக வழியில் சிந்திக்கும் சிங்களவர்களுக்கும் மோசமானது என்று இன்னொரு எம்.பியான மனோகணேசன் சுட்டிக்காட்டியதற்கும் பதில் இல்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இரண்டு பெரிய இராணுவத் தலைமையகங்கள் அமைக்கப்படவுள்ளன. அதன் கீழ்தான் தமிழர் வாழும் முகாம்களை ஒப்படைக்கப்போகிறார்கள்.

மீண்டும் அப்பகுதியில் தீவிரவாதக்குழுக்கள் தோன்றாமல் இருக்க இராணுவம் அங்கு நிரந்தரமாக இருந்தாக வேண்டும் என்று சரத்பொன்சேகா சொல்லிவிட்டார். இப்போதைக்கு இராணுவ நடமாட்டம் குறைவதாகத் தெரியவில்லை.

புலிகள் அமைப்பு முற்றிலும் துடைத்தெறியப்பட்டதாக இராணுவம் சொன்னாலும் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு காடுகளில் இப்போதும் சில பல போராளிகள் பதுங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஒரு காலத்தில் தமிழ்ப்பகுதியின் முதலமைச்சராக இருந்து இன்று ஒரிஸாவில் எங்கோ தங்கியிருக்கும் வரதராஜப்பெருமாள் சமீபத்தில் அளித்த பேட்டியில் இதை உறுதிப்படுத்தியுள்ளார்.

காட்டுப்பகுதியில் மறைந்துள்ள புலிகள் சரணடைய வேண்டும் என்று அரசு அறிவித்துள்ளது. அதை விடப் புலிகளின் சில முக்கிய உளவுத்துறை ஆட்கள் இன்னமும் கொழும்புப் பகுதியில் ஊடுருவி இருப்பதாகவும் இராணுவம் அச்சப்படுகிறது. இந்நிலையில் 5 மணிக்கே அடங்க ஆரம்பித்துவிடுகிறது கொழும்பு. அத்தனை கடைகளையும் இருட்டுவதற்கு முன் அடைத்துவிடுகிறார்கள். பெரும்பான்மையான இராணுவ வீரர்கள் புலிகளின் ஆளுமையில் இருந்த பகுதியில் தினமும் தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளனர். அனைத்து இராணுவ வீரர்களும் தமிழர் பகுதியில் உள்ள இடங்களை இலவசமாக வழங்க இருப்பதாக அரசு வாக்குறுதி கொடுத்துள்ளது. இப்போதைக்கு அவர்களுக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை அது தான்.

உயிர் இழந்த இராணுவ வீரர்களது குடும்பத்துக்கு இழப்பீடு வழங்க முடியாத அளவுக்கு நிதி நெருக்கடி வாட்டுகிறது. உலக வங்கியிடம் 10ஆயிரம் கோடி ரூபாய் கடன் கேட்டது இலங்கை. அது பற்றி இப்போதைக்கு முடிவு செய்ய முடியாது என்று ஆறப்போட்டுவிட்டது உலக வங்கி . எனவே இராணுவத்திற்கும் நாட்டுக்கும் உங்களாலான உதவியை செய்யுங்கள் என்று மக்களிடம் கையேந்தும் நிலையும் வந்துவிட்டது.

போர் போர் என்று சொல்லி இதுவரை கணக்கில்லாமல் இராணுவத்துக்கு செலவு செய்து வந்தீர்கள். இனி மேல் இதை விசாரணை செய்ய வேண்டும். இங்கு நிறைய ஊழல் நடந்துள்ளது என்று எதிர்க்கட்சிகள் குரலை உயர்த்த ஆரம்பித்துள்ளன.

வவுனியா , மயிலிட்டி ஆகிய இரண்டு இராணுவ ஆயுதக்கிடங்குகளிலும் திடீர் தீ விபத்து ஏற்பட்டதற்கு பின்னணி இந்த முறைகேடுகள் தான் என்கிறார்கள். ஆயுதங்கள் வாங்கப்பட்டது , பயன்படுத்தப்பட்டது தொடர்பாக இனி தலைமைக்கு கணக்குகளை கொடுத்தாக வேண்டும்.

அந்த முறைகேடுகளை மறைப்பதற்காகத்தான் விபத்து நடந்து அழிந்ததாகச் சொல்கிறார்கள் . எதிர் பாராத விபத்தாக இருந்தால் யாராவது இறந்திருக்க வேண்டுமே என்று கொழும்புப்பத்திரிகையாளர்கள் கேட்கிறார்கள். இராணுவத்தலைமையகம் இது தொடர்பான விசாரணையை முடுக்கி விட்டுள்ளது.

புலிகளுக்கு உதவி செய்ததாக இராணுவ அதிகாரிகள் சிலர் கைது செய்யப்பட்டு வருகிறார்கள். மனித வெடிகுண்டுத்தாக்குதல் நடத்துவதற்காக சில மாதங்களுக்கு முன் அனுப்பப்பட்ட புலியான கிரி தனக்கு உதவி செய்த இராணுவ அதிகாரிகளைச் சொன்ன போது அதிகார வட்டமே அதிர்ந்துபோனதாம்.

மேலும் மேலதிகாரிக்கு பிடிக்காத சிலரையும் புலிகளுக்கு தகவல் தந்தவர்கள் என்று கைது செய்ததாகவும் சொல்லப்படுகிறது. கைதான அதிகாரிகளில் ஒருவர் எனக்கு இராணுவத்தில் முக்கியத்துவம் தராததால் புலிகளுக்கு பல தகவல்களை தந்து வந்தேன் என்று சொல்லியிருக்கிறார். இது போன்ற விசார்ணைகள் இராணுவ வீரர்கள் மத்தியில் கிலி ஏற்படுத்தி வருகின்றன.

கடந்த ஆண்டை விட வரும் ஆண்டில் இராணுவத்திற்கான நிதியை அதிகப்படுத்த வேண்டும் என்று சரத் பொன்சேகா கோரிக்கை வைத்துள்ளார். டிசம்பரில் ஜனாதிபதித்தேர்தல் , அடுத்த பெப்ரவரியில் பொதுத்தேர்தல் என்று அடுத்தடுத்த மெகாசெலவுகள் கண்ணைக்கட்டிக்கொண்டிருக்கின்றன.

சர்வதேச நாடுகளின் நம்பிக்கையைப் பெறுவது தான் எனக்கு கஷ்ரமாக இருக்கிறது என்று தனது வேதனையை வெளிப்படையாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சொல்லிக்கொண்டு இருந்த போது தான் மோசமாக வீழ்ச்சியடையும் நாடுகளின் பட்டியலில் 22ஆவது இடத்தில் இலங்கை இருக்கிறது என ஃபாரின் பொலிஸி பட்டியல் போட்டுள்ளது. 117 நாடுகளின் தர வரிசை இது. புத்தரின் போதனைகளில் அசோகருக்கு அதிகம் பிடித்தது இது தான், "ஒரு யுத்தத்தில் தோற்றவர்களை விட வென்றவர்கள் தான் நிம்மதியாக இருக்க மாட்டார்கள்"

> நுகத்தடியில்லாத வண்டியையும் கடிவாளம் இல்லாத குதிரையையும் செலுத்த இயலாது.
> – ஓர் அறிஞர்

வலம்புரி

## இளம் வயதினரை வழிப்படுத்தும் களநிலை வேண்டும்

யாழ். குடாநாட்டின் தற்போதைய சூழமைவு நீதிபரிபாலனத்தின் உதவியை வேண்டி நிற்கின்றது.

இளம் சமூகம் முழுமையான கட்டற்ற சுதந்திரத்தை அனுபவிக்க முற்படுகின்றது.

பெற்றோர்களின் தலையீடுகளையோ, ஆசிரியர்களின் அறிவுரைகளையோ, பெரியவர்களின் ஆலோசனைகளையோ அவர்கள் ஏற்கத் தயார் இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும் என்ற நினைப்பு இளம் சமூகத்தை தவறான பாதைக்கு இட்டுச் செல்கின்றது.

இளம் வயதினரின் சிந்தனை, செயல்வேகம் என்பன மதிக்கப்பட வேண்டும் என்பதிலும், அவர்களின் நியாயமான நடவடிக்கைகளுக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டும் என்பதிலும் இரு வேறு கருத்திற்கு இடம் இல்லை.

ஆனாலும் இளம் வயதினரின் சுதந்திரம் என்பது மற்றவர்களின் சுதந்திரத்துக்கு இழுக்கையோ அல்லது பாதிப்பையோ ஏற்படுத்திவிடல் ஆகாது.

இதனை இளம் வயதினர் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் சுதந்திரமானவர்கள், எம்மை எவராலும் எதுவும் செய்து விடமுடியாதென்ற நினைப்பு இல்லாதொழிவது கட்டயமானதாகும்.

இந்நிலை ஏற்பட வேண்டுமாயின், இளம் சமூகத்தின் வேகமான சிந்தனையோட்டத்துக்கு ஏற்ற கள நிலையை அமைத்துக்கொடுப்பது கட்டாயமானதாகும்.

அவ்வாறானதோர் களநிலை என்பது மூன்று வழிகளில் ஏற்பட முடியும் அவை;

I. உயர் கல்வி வாய்ப்பு

II. வேலைவாய்ப்பு

III. ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழில் நுட்பக் கற்றல்.

இங்கு உயர்கல்வி வாய்ப்பென்பதில் இலங்கை திறந்த பல்கலைக்கழகம், யாழ். பல்கலைக்கழகம், உயர் தொழில் நுட்ப நிறுவகம், தொழில் நுட்பக் கல்லூரி என்பன காத்திரமான பணியை ஆற்றமுடியும்.

இளம் சமூகம் உயர் கல்விகற்கும் வாய்ப்பை அடையும் போது அங்கு ஆளுமையும் பொறுப்பும் கூடவே உள்ளேற்றம் செய்யப்படுகின்றது.

அடுத்து வேலைவாய்ப்பு என்ற விடயம் மிக மிக முக்கியமானதாகும்.

இளம் வயதினர் வேலையின்றி அலைவது கூட அவர்களை தவறான பாதைக்கு இட்டுச் செல்கின்றது.

இந்த வேலை வாய்ப்பை கல்வி தராதரத்தின் அடிப்படையிலும் பயிற்சி நெறிகளின் அடிப்படையிலும் மேற்கொள்ள முடியும்.

மூன்றாவதாக குறிப்பிடப்பட்டுள்ள ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழிநுட்பக் கற்றல் என்பது கல்வி தராதரம் என்ற வரையறைகளை கடந்து முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதன் மூலம் ஆரோக்கியமான இளம் சந்ததியை உருவாக்கிய–வழிகாட்டிய சாதனையை படைக்கமுடியும்.

# ஏழ்மை என்ற வசனத்தை இலங்கையிலிருந்து நீக்குவதே எமது அரசாங்கத்தின் நோக்கமாகும்

## கட்சி அமைப்பாளர்கள் மத்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

எல்லைக் கிராமம் என்ற வசனம் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டது போல ஏழ்மை என்ற வசனத்தை இலங்கையிலிருந்து நீக்கிவிடுவதே எமது அரசாங்த்தின் நோக்கமாகும். நாட்டிலுள்ள சகல ஏழ்மையான கிராமங்களும் அபிவிருத்தி செய்யபப்ட்டு அங்குள்ள மக்களும் அபிவிருத்தியின் பெறுபேறுகளை அனுபவிக்க வேண்டும். அதற்காக அரசாங்கத்தின் சகல அமைச்சர்களும் அதிகாரிகளும் பொறுப்பு டன் இருக்கின்றார்கள் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மொனராகலை மாவட்ட அமைப்பாளர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்களை அலரிமாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கூறுகையில்,

உலகில் வளர்ச்சியடைந்த நாடுகள் என்று சொல்லிக் கொள்கின்ற ஏகாதிபத்திய நாடுகளின் கலானித்துவத்திற்கு அடிமைப்பட்ட நாடல்ல இலங்கை. ஒரே கொடியின் கீழ் செயற்படுகின்ற கௌரவமிக்க நாடே. எங்களுக்கு அழுத்தம் கொடுக்க எதிர்பார்த்திருக்கின்ற பிரிவினருக்கு எமது மக்களின் தீர்ப்பு என்னவென்பதை நாங்கள் காண்பிக்க வேண்டும்.

பயங்கரவாதத்தின் அச்சுறுத்தல்களுக்கு இலக்காகியிருந்த மொனராகலை மாவட்டம் அபிவிருத்தியில் ஓரளவுக்கு பின்டைந்த மாவட்டமாகும் என்பதால் அந்த மாவட்டத்திலுள்ள சகல ஏழ்மையான கிராமங்களையும் அபிவிருத்தி செய்ய வேண்டிய பொறுப்பு மாகாண சபைக்கு வழங்கப்படவிருக்கின்றது.

அதற்காக சரியான தலைமைத்துவத்தை தேர்ந்தெடுத்து கொள்வது பிரதேச மக்களின் பொறுப்பாகும். பயங்கரவாதத்தை முழுமையாக ஒழித்து நாட்டை ஐக்கியப்படுத்தி ஒரு கொடியின் கீழ் கொண்டுவந்ததன் பின்னர் நடத்தப்படுகின்ற முதலாவது தேர்தலே ஊவா மாகாண சபைத் தேர்தலாகும்.

உலகத்திலுள்ள சிலர் கடந்த காலங்களில் எங்களுக்கு முடிந்தளவு அழுத்தங்களை கொடுத்தனர். எமக்கு வந்த சகல அழுத்தங்களுக்கு மத்தியிலேயே நாம் இந்த சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டோம். அவ்வாறானவர்கள் நாடு சுதந்திரம் பெற்றது தொடர்பில் மக்கள் எவ்வாறான பதிலை வழங்கப் போகிறார்கள் என்பதனையே அவதானித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு பதிலளிக்க வேண்டிய நல்ல சந்தர்ப்பமே இந்த தேர்தலாகும் என்று தெரிவித்தார். (ஓ-4)

# வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் யாழ் மாவட்டத்திலான செயற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் அடிப் படை கல்வித்துறை அலகினால் மேற்கொள்ளப்படுகின்ற பரிகாரக் கல்வி, உள சமூகத்துணை, அனர்த்த முகாமைத் துவம், இரண்டாம் தேசிய மொழி கற்பித்தல், சமாதானமும் விழுமியமும் ஆகிய செயற்கூறுகளை அமுல்படுத்துவதால் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை அவதானிக்கும் பொருட்டு அடிப்படை கல்வித்துறை அலகு ஆளணியினரால் பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த வகையில் யாழ்ப்பாணம் , வலிகாமம், தீவகம் , வடமராட்சி, தென்மராட்சி ஆகிய வலயங்களைச் சேர்ந்த முதன்மை உளவளத்துணையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் காலை 8.30 மணிமுதல் மாலை 4.15 மணிவரை நடை பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் ஒவ்வொரு வலயத்திலிருந்தும் தற்போது செயற்படும் முதன்மை உளவளத் துணையாளர்கள் பங்குபற்ற வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாடசாலைத் தரிசிப்பு செயற்திட்டத்தில் இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் வலயத்தை சேர்ந்த வண்ணை நாவலர் மகா வித்தியாலயம், புனித ஜோன் பொஸ்கோ வித்தி ஆகியவற்றிலும் வலிகாமம் வலயத்தை சேர்ந்த அருணோதயாக் கல்லூரிக்கும் நாளை வியாழக்கிழமை வலிகாமம் வலய மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம், தீவக வலய வேலணை சரஸ்வதி வித்தியாலயம், வேலணை மேற்கு மகா வித்தியாலயம் ஆகியவற்றிற்கும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வடமராட்சி வலய கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, நெல்லியடி மெ.மி.த பாடசாலை, தென்மராட்சி வலய நாவற்குழி மகா வித்தியாலயம், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை ஆகியவற்றிற்கும் பாடசாலை தரிசிப்பு இடம்பெற உள்ளதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-4)

# அரசாங்கத்தின் செயற்பாடுகளினால் பல பிரபாகரன்கள் உருவாகக்கூடும்

## மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான இந்த அரசாங் கத்தின் நடவடிக்கையின் காரணமாக ஆயிரக்கணக்கான பிரபாகரன்கள் உருவாகக்கூடிய அபாயம் நிலவுவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளை யுத்த ரீதியாக தோற்கடித்ததன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டுவிட்டதாக எவரேனும் கருதினால் அது முட்டாள் தனமான கருத்தாகவே நோக்கப்படவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

30 வருட காலமாக நீடித்த தேசிய இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வுத்திட்டமே தற்போது விஞ்சி நிற்கும் தேவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சுதந்திரத்தின் மேடை என்ற தொனிப் பொருளில் தலவாக்கலை நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் கடுமையான நோயின் சில அறிகுறிகள் மட்டுமே எனவும் இன்னமும் நோய்க்கான மருந்து வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேசிய இனப்பிரச்சினைக்கான தமது தீர்வுத் திட்டத்தை அரசாங்கம் தெளிவாக நாட்டு மக்களுக்கு முன் வைக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-4)

## பகுதி நேர ஆங்கில பாட ஆசிரியர்களுக்கு

யாழ் மாவட்டத்தில் உள்ள 5 வலயங்களிலும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களுள் 71 பேரும் ஆங்கில பாட உயர் தேசிய டிப்ளோமா ஆசிரியர்கள் 15 பேருமாக 86 பேர் சமூக சேவை அமைச்சரைச் சந்தித்து கலந்துரையாடியதன் பயனாக இவ் ஆசிரியர்களின் தகைமைகள் அடங்கிய ஆவணங்களை மேலதிக மாவட்டக் கல்விப் பணிப்பாளரின் கவனத்திற்கு சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் குறிப்பிட்ட 86 பேரும் 16 ஆம் திகதி பி.ப 2 மணிக்கு யாழ் மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர். ஓ

## சுவாமி விவேகானந்தரின்

## எல்லாவற்றிலும் இறைவனைக் காணலாம்



பிரபஞ்சத்திலுள்ள அனைத்துமே இறைவனால் சூழப்பட வேண்டும் என்று மிகவும் பழைய ஓர் உபநிடதத்தின் ஆரம்பத்தில் காண்கிறோம்.

அனைத்தையும் இறைவனால் மூட வேண்டும் ; ஒருவகை போலியான இன்ப நோக்காகவோ இல்லை, துன்பங்களைக் கண்டும் காணாதது போல் இருக்கும் பாசாங்காகவோ அல்ல. உண்மையிலேயே எல்லாவற்றிலும் இறைவனைக் காண்பதன் மூலம் இதைச் செய்ய வேண்டும்.

இவ்வாறு உலகத்தைத் துறந்த பிறகு எஞ்சுவது என்ன? கடவுள்தான். இதன் பொருள் என்ன? நீ உன் மனைவியோடு வாழலாம் ; அவளைக் கைவிட வேண்டும் என்பதல்ல. ஆனால் அவளிடம் கடவுளைக் காண வேண்டும்.

# க.பொ.த. (உ/தர) பாடத்தெரிவும் Z புள்ளியும்

இலங்கையில் 2002/2003 ஆம் கல்வியாண்டிற்கு முன்னர் க.பொ.த (உ/தரப் பரீட்சையில் மொத்தப்புள்ளிகளின் அடிப்படையிலேயே மாணவர்கள் தரப் படுத்தப்பட்டு பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படும் முறை பின்பற்றப் பட்டு வந்தது.

ஆனாலும் இம்முறை மூலம் பல குறை பாடுகள் உள்ளமை கண்டு பிடிக்கப்பட்ட மையினால் Z- அளவுத்திட்ட முறையே இன்று வரை பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

Z- அளவுத்திட்ட முறை என்பது ஏற் கனவே மேலைத்தேய நாடுகளில் பின் பற்றப்படுகின்ற ஒரு முறையாகும்.

Z- அளவுத்திட்ட முறை பயன் படுத்தப் பட்டு வருவதால் மொத்த புள்ளிகளின் அடிப் படையில் மாணவர்களைத் தரப்படுத்தும் முறையில் இருந்து வந்த பல குறைபாடு கள் நீக்கப்பட்டுள்ளன. (Z-அளவுத்திட்ட முறையை இலங்கைக்கு அறிமுகப்படுத் திய பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு விற்கே முதல் நன்றிகள்)

மாணவர் பாடங்களிற்கு விடையளிக் கும் போது கடினத்தன்மை, இலகுத் தன்மை என்பவை மிகுந்த செல்வாக்குச் செலுத்தி நிற்கின்றன. இவ்விரு தன்மை களும் பல்கலைக்கழக அனுமதியில் செல் வாக்குச் செலுத்துதலை இயன்றளவு குறைத்து விடுதலே Z அளவுத்திட்ட முறை யின் நோக்கமாகும். அதாவது பாடங்க ளுக்கிடையே ஒரு சமச்சீர்த் தன்மையை பேணுதலே இதன் நோக்கமாகும்.

Z - அளவுத்திட்ட முறையானது கணித, உயிரியல் பிரிவு மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்வதைக் காட்டி லும் கலை வர்த்தக பிரிவு மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்வ தற்கே முக்கிய பங்காற்றி வருகின்றது. அதிலும் யாழ்ப்பாண மாணவர்களை பொறுத்த மட்டில் வர்த்தகப் பிரிவினரை விட கலைப் பிரிவினர்க்கே அதிக செல் வாக்குச் செலுத்தி வருகின்றது. அந்த வகையில் கலைப்பிரிவு மாண வர்களின் பாடத் தெரிவுகளினை நோக்குவோம்.

பொருளியல், புவியியல், வரலாறு, கணிக்கீடு, வணிகப்புள்ளிவிபரவியல், மனைப்பொருளியல், விவசாய விஞ்ஞா னம், கணிதம், உயர் கணிதம்,

இணைந்த கணிதம், அரசியல் விஞ் ஞான மூலகங்கள், அளவையியலும் விஞ் ஞான முறையும்

கீழ்வரும் தொழில் நுட்பப் பாடங்கள் ஆறில் ஏதாவது ஒன்று

1. குடிசார் தொழில்நுட்பம்
2. இலத்திரனியல் தகவல் தொழில் நுட்பம்
3. விவசாயத் தொழில் நுட்பம்
4. பொறிமுறைத் தொழில் நுட்பம்
5. உணவுத் தொழில் நுட்பம்
6. உயிரியல் வளங்கள் தொழில் நுட்பம்

போன்ற சமூக விஞ்ஞான பாடங்களி லிருந்து குறைந்தது ஒரு பாடத்தையாவது தெரிவு செய்ய வேண்டும். விரும்பினால் மூன்று பாடங்களையும் தெரிவு செய்ய லாம்.

சமூக விஞ்ஞான பாடங்களில் இரு பாடங்களை மட்டும் தெரிவு செய்த மாண வர்கள் மூன்றாவது பாடமாக

- பௌத்தம்
- பௌத்த நாகரிகம்
- இந்து சமயம்
- இந்து நாகரிகம்
- கிறிஸ்தவம்
- கிரேக்க உரோம நாகரிகம்
- இஸ்லாம்
- இஸ்லாமிய நாகரிகம்

போன்ற சமயங்களும் ,நாகரிகங்களும் பாடங்களிலிருந்து ஒன்றினை மட்டும் தெரிவு செய்யலாம். அல்லது

- தமிழ்
- சிங்களம்
- ஆங்கிலம்

போன்ற தேசிய மொழிகள் பாடங்களி லிருந்து ஒன்றினை மட்டும் தெரிவு செய் யலாம். அல்லது

- சித்திரம்
- நடனம்(பரதம்)
- நாடகமும் அரங்கமும் (தமிழ்)
- சங்கீதம்1. கீழைத்தேய
  2. கர்நாடக
  3. மேலைத்தேய (ஏதாவது ஒன்று)

போன்ற அழகியற் கற்கைகள் பாடங் களிலிருந்து ஒன்றினை மட்டும் தெரிவு செய்து கற்றல்களை மாணவர்கள் மேற் கொள்ள லாம்.

மேலும் இரண்டு மொழிகளுக்கு அதிக மாகாமலும் சமயங்கள் நாகரிகங்களில் ஒன்றுக்கு அதிகமாகாமலும் தொழில் நுட் பப் பாடங்களில் ஒன்றுக்கு அதிகமாகாமலும்

- கணக்கியல்
- வணிகப்புள்ளி விபரங்கள்
- வணிகக்கல்வி
- பொருளியல்

போன்ற பாடங்களில் ஒன்றுக்கு அதிக மாகாமலும் தெரிவு செய்து க.பொ.த (சா/ தர) பரிட்சையில் ஆங்கிலத்தில் சித்திய டைந் தும் இருப்பின் அப் பரீட்சார்த்தி கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஸ்ரீ பாளி வளாகத்தில்.

- அரங்கற் கலையில் B.A (Hons)
- வெகுஜன ஊடகத்தில்B.A (Hons)

போன்ற நான்கு வருட பட்ட நிகழ்ச்சித் திட் டங்களுக்கு உள்வாங்கப்படலாம். (ஸ்ரீ பாளி வளாகத்தினால் நடத்தப்படும் உளச் சார் புப் பரீட்சையிலும் சித்தியடைய வேண்டும்.)

**இனி நாம் Zஅளவுத்திட்டத்தினை எப்படிக் கணிப்பது என்பது பற்றி பார்ப் போம்.**

சத்தியன், வித்தியன் எனும் இரு மாண வர்களில் சத்தியன் பொருளியல் பாடத்திற்கு 85 புள்ளியும், வித்தியன் பொருளியல் பாடத்திற்குப் பதிலாக அளவையியல் பாடத் திற்கு 85 புள்ளியையும் பெற்றிருந்தால் அவர் கள் இருவரினதும் தராதரங்கள் சம அள வானவை என்று கருதிவிட முடியாது. ஏனெ னில் அவர்கள் விடை எழுதிய வினாத்தாள் களின் கடினத்தன்மை நிச்சயமாக ஒரே அளவானதாக இருந்திருக்கமாட்டாது.

இதில் வினாத்தாள்களின் கடினத்தன் மையான பாடத்திற்கு 85 புள்ளிகளைப் பெற்ற மாணவனே உண்மை யான திறமை சாலியாக இருப்பான். இதுவே Z- அளவுத் திட்ட முறையின் முக்கிய நன்மை யாகக் கரு தப்படுகின்றது.

**Z-அளவுத்திட்டம் கணிக்கும் முறை**

Z- அளவுத் திட்டம் $Z = \dfrac{Xi - X}{SD}$

எனும் சூத்திரத்தினால் கணிக்கப்படு கின்றது.

Xi-குறித்த ஒரு மாணவனின் குறித்த பாடத்திற்கான புள்ளி

X-குறித்த பாடத்திற்கான சராசரி

SD- குறித்த பாடத்திற்கான நிய மவிலகல்

நியமவிலகல் SD ஆனது

$$SD = \sqrt{\frac{\sum (Xi - \bar{X})^2}{\sum fi}}$$ இனால்

கணித்தறியப்படும்.

உதாரணம்: குறித்த ஒரு துறைக்கு 7 பாடங்கள் உள்ளன என்போம். ஆனாலும் ஒரு மாணவன் மூன்று பாடங்களை மட்டுமே தெரிவு செய்து பரீட்சைக்குத் தோற்றலாம். 15 மாணவர்கள் குறித்த ஒரு பரீட்சைக் காக தோற்றிய பாடங்களும் அதற்கான Z புள்ளிகளும் கீழே தரப்பட்டுள்ளன.

| மாணவர் பெயர் | P | $Z_P$ | Q | $Z_q$ | R | $Z_r$ | S | $Z_s$ | T | $Z_t$ | U | $Z_u$ | V | $Z_v$ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சத்தியன் | 75 | 0.4146 | - | - | 80 | 0.2121 | 84 | -0.1270 | - | - | - | - | - | - |
| வித்தியன் | 80 | 0.8117 | - | - | - | - | 90 | 1.2065 | - | - | 82 | -0.5135 | - | - |
| தீபிகா | - | - | 60 | 1.1308 | - | - | 86 | 0.3175 | 92 | 1.4415 | - | - | - | - |
| விநோத் | 48 | -1.7292 | - | - | 84 | 1.4242 | - | - | 72 | 0.6680 | - | - | - | - |
| அபிசன் | 72 | 0.1764 | - | - | 79 | 0.0909 | - | - | - | - | - | - | 82 | 0.5550 |
| நிலான் | - | - | 94 | 1.0292 | - | - | 76 | -1.9050 | - | - | - | - | 64 | -1.7760 |
| சந்தோஷ் | - | - | - | - | 81 | 0.5152 | 90 | 1.2065 | - | - | - | - | 79 | 0.1665 |
| ஆதித்யா | 57 | -1.0146 | - | - | - | - | - | - | - | - | 90 | 0.6947 | 82 | 0.555 |
| கபிலன் | - | - | 81 | 0.2033- | - | - | - | - | 90 | 1.2305 | - | - | 72 | -0.74 |
| நிவேதா | - | - | - | 1.1944 | 73 | -1.9091 | - | - | 68 | -1.0899 | 96 | 1.6009 | - | - |
| அஜந்தா | 75 | 0.4146 | 59 | - | - | - | - | - | 78 | -0.0352 | - | - | - | - |
| அகிலா | 56 | -1.0940 | - | - | 79 | 0.0909 | - | - | - | - | 81 | -0.6645 | - | - |
| மதி | 90 | 1.6057 | - | 1.0927 | - | - | 82 | -1.5715 | - | - | - | - | 75 | -0.3515 |
| அபிரா | - | - | 95 | - | - | - | 84 | -0.1270 | - | - | 78 | -1.1176 | - | - |
| குபேந்தி | 75 | 0.4146 | - | - | - | - | - | - | 70 | 0.8789 | - | - | 90 | 1.5910 |

| மாணவர் பெயர் | மொத்தப் புள்ளி | மொத்த Z-புள்ளி | மொ.பு அடி.இல் நிலை | Z-புள்ளி அடி.இல் நிலை | பெறுபேறு |
|---|---|---|---|---|---|
| சத்தியன் | 239 | 0.4997 | 06 | 07 | 3A |
| வத்தியன் | 252 | 1.5047 | 02 | 02 | 3A |
| தீபிகா | 238 | 0.6282 | 07 | 06 | 2AC |
| விநோத் | 204 | -0.9730 | 15 | 12 | ABS |
| அபிசன் | 233 | 0.8223 | 11 | 04 | 2AB |
| நிலான் | 234 | -2.6518 | 10 | 15 | 2AC |
| சந்தோஷ் | 250 | 1.8882 | 03 | 01 | 3A |
| ஆதித்தியா | 229 | 0.2351 | 12 | 08 | 2AC |
| கபிலன் | 243 | 0.6938 | 05 | 05 | 2AB |
| நிவேதா | 237 | -1.3981 | 08 | 13 | A2B |
| அஜந்தா | 212 | -0.8150 | 14 | 11 | 2AC |
| அகிலா | 216 | -1.6676 | 13 | 14 | 2AC |
| மதி | 247 | -0.3173 | 04 | 10 | 3A |
| அபிரா | 257 | -0.1519 | 01 | 09 | 3A |
| குபேந்தி | 235 | 1.1267 | 09 | 03 | 2AB |

மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் நோக்கும் போது அபிராவின் நிலையே முதலாவதாக உள்ளது. Z - புள்ளிகளின் அடிப்படையில் பார்க்கும் போது அபிராவின் நிலை ஒன்பதாவதாகக் காணப்படுகிறது.

மொத்தப்புள்ளிகளின் அடிப்படையில் நோக்கும் போது சந்தோசின் நிலை மூன்றா வதாக உள்ளது. Z- புள்ளிகளின் அடிப்படை யில் பார்க்கும் சந்தோசின் நிலை முதலாவ தாகக் காணப்படுகிறது. இவர்கள் போலவே பலரின் நிலைகள் மாறியுள்ளதை அவதா னிக்கலாம்.

Z - புள்ளியானது $Z = \dfrac{X - \bar{X}}{SD}$

$Z - \geq 1$ ஆக இருப்பதற்கு

$$\frac{X - \bar{X}}{SD} \geq 1$$

$$X - \bar{X} \geq SD \qquad (\because \; SD > 0)$$

$$\therefore X \geq SD + \bar{X}$$

அதாவது ஒரு மாணவன் குறித்த ஒரு பாடத்தில் அவனின் Zபுள்ளி 1 இலும் அதிக மாக இருப்பதற்கு குறித்த பாடத்திற்கான சராசரிப் புள்ளியினதும் குறித்த பாடத்திற் கான நியம விலகலினதும் கூட்டுத் தொகை யானது குறித்த பாடத்திற்கான புள்ளியி லும் குறைவாக இருத்தல் வேண்டும்.

உதாரணம்: பாடம் P ற்கான நியமவில கல் 12.5943 உம் பாடம் P ற்கானசரா சரிப் புள்ளி 69.7778 உம் ஆகும். அந்த வகை யில் Pயில் மதி பெற்ற புள்ளி 90 ஆகும்.

இப்பெறுமதி 12.5943 இனதும் 69. 7778 இனதும் கூட்டுத்தொகையிலும் அதி கம் என்பதை நீங்கள் அவதானிக்கலாம். இதனாலேயே மதியின்Z புள்ளி 1 இலும் அதி கமாகக் காணப்படுகின்றது.

ஆகவே தான் ஒரு மாணவன் போட்டி குறைந்த பாடங்களையோ அல்லது போட்டி கூடிய பாடங்களையோ தெரிவு செய்யலாம். எதையும் தெரிவு செய்யும் போது அப் பாடத் தில் எது அதிகூடிய புள்ளியோ அப்புள்ளி யினை மாணவர் பெற முயற்சிக்க வேண் டும். அல்லது போனால் அப்புள்ளிக்கு மிக மிக கிட்டியதான புள்ளியினையாவது பெற வேண்டும்.

உதாரணம்: Tஎன்ற பாடத்தில் தீபிகா பெற்ற புள்ளி 92 (A)ஆகும். அதே பாடத் தில் கபிலன் பெற்ற புள்ளி 90(A) ஆகும். இவர்களின் Z புள்ளிகள் முறையே 1.4415, 1.2305 ஆகும். ஆனால் அதே பாடத்தில் அஜந்தா பெற்ற புள்ளி 78 (A)ஆகும். ஆனால் அவளின் Z-புள்ளி -0.0352 ஆக உள்ளதை மாணவர்கள் அவதானிக்கலாம்.

மேலும் P என்ற பாடத்தை 9 பேரும், Q என்ற பாடத்தை 5 பேரும் தெரிவு செய்து படிக்கின்றனர்.

இங்கு மதி P என்ற பாடத்தில் 90 புள்ளியும் அபிரா Qஎன்ற பாடத்தில் 95 புள்ளியையும் பெற்றிருந்த போதும் மதி யின் Z புள்ளி 1.6057 ஆக இருப்பதை யும் அபிராவின் Zபுள்ளி 1.0292 ஆக இருப் பதையும் கண்டு தெளிந்து கொள்ளலாம்.

எனவே தான் ஒரு மாணவன் குறித்த ஒரு பாடத்தில் திறமையாக இருப்பதைவிட அப்பாடத்தில் அம்மாணவன் மற்றய மாண வர்களைவிட எவ்வளவு சதவீதம் திறமை யாக உள்ளான் என்பதையே இந்த Z- புள் ளித்திட்டமானது எடுத்து இயம்புகிறது.

எனவே போட்டி மிகுந்த இன்றைய பல் கலைக்கழக தெரிவுகளிலே Zபுள்ளித் திட் டம் மிக உன்னதமான பங்கினை ஆற்று கிறதென்றால் அதில் ஏதும் மிகையில்லை.


(க.பொ.த (உ/தர) கலை வகுப்பிற்கு செல் லும் புது முக மாணவர்கள் உங்கள் பாடங் களை தெரிவு செய்யும் போது அப்பாடத் தல் உங்களால் சாதிக்க முடியும் என்ற மன வைராக்கியத்தோடு விடாமுயற்சி மட்டும் இருந்துவிட்டால் போதும்.

நிச்சயம் உங்கள் இலக்கு வெற்றி பெறும் என்பது திண்ணம்.

சமரபாகு
சீனா உதயகுமார்
வல்வெட்டித்துறை

# ஹேரத், குலசேகர ஜோடி அசத்தல்; இலங்கை அணி வரலாறு படைத்தது

## இரண்டாவது டெஸ்டிலும் பாகிஸ்தான் தோல்வி



(கொழும்பு)

குலசேகர, ஹேரத் ஜோடியின் துல்லிய மான பந்து வீச்சின் மூலம் இலங்கை அணி இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் பாகிஸ் தான் அணியை வீழ்த்தி தொடரை 2:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

இதன் மூலம் குமார் சங்கக்கார தலைமை யிலான இலங்கை அணி தனது சொந்த மண்ணில் பாகிஸ்தான் அணியை டெஸ்ட் தொடர் ஒன்றில் வீழ்த்தி வரலாறு படைத்தது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் மற்றும் ஒரே ஒரு இருபது-20 போட்டி கொண்ட தொடரில் விளை யாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் இலங்கை அணி வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த 12ஆம் திகதி கொழும்பு பி.சரவணமுத்து மைதானத்தில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங் ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 90 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங் ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 240 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு முதலாவது இன்னிங்ஸில் 150 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலி ருந்த பாகிஸ்தான் அணி இரண்டாவது இன் னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்றுமுன் தினம் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 178 ஓட் டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் 3ஆம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு அலாம்-யூனிஸ்கான் ஜோடி சிறந்த இணைப்பாட்டத்தை வழங்கியது.

இதில் அணித்தலைவர் யூனிஸ்கான் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்ய பாகிஸ்தான் அணி 250 ஓட்டங்களைக் கடந்தது.

இந்த ஜோடி இரண்டாவது விக்கெட்டுக் காக 200 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது அணித்தலைவர் யூனிஸ்கான் 82 ஓட்டங்களுடன் பரணவித்தானவின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் டில்சானி டம் பிடி கொடுத்து ஆட்டம் இழக்க பாகிஸ்தான் 285 ஓட்டங்களை எடுத்து 2ஆவது விக்கெட் டை இழந்தது.

**வந்தனர் ஹேரத், குலசேகர**

தொடர்ந்து களமிறங்கிய மொகமட் யூசுப் 06, மிஷ்பா உல்கக் 03 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி 303 ஓட்டங் களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்தது.

அடுத்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய அறிமுக வீரர் பாவாட் அலாம் 168 ஓட்டங் களை எடுத்து ஆட்டம் இழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய வீரர்கள் வந்த வேகத்திலேயே அரங்கு திரும்ப பாகிஸ்தான் அணி இரண்டாவது இன்னிங்ஸில் 96.4 ஓவர்களில் 320 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் ரங்கண ஹேரத் 35 ஓவர் கள் பந்து வீசி 5 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 99 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக் களையும் நுவான் குலசேகர 19.4 ஓவர்கள் பந்து வீசி 6 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 37 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 4 விக்கெட் டுக்களையும் பரணவித்தான ஒரு விக்கெட் டையும் பதம் பார்த்தனர்.

இதனடிப்படையில் 171 ஓட்டங்களை எடுத் தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத் தாடிய இலங்கை அணி வர்ணபுர, சங்கக்கார வின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் 31.5 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 171 ஓட்டங்களைக் குவித்து 7 விக் கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று வரலாறு படைத்தது.

அதில் வர்ணபுர 56 பந்துகளில் (7 பவுண் டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 54 ஓட்டங் களையும் அணித்தலைவர் சங்கக்கார 46 ஓட்டங்களையும் மஹேல ஜெயவர்த்தனா ஆட்டமிழக்காமல் 35 பந்துகளில் (5 பவுண் டரிகள் அடங்கலாக) 37 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்து வீச்சல் சயிட் அஜ்மல், அப்துல் ரஜீப் மற்றும் சொகைப் மலிக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியின் ஆட்டநாயகன் விருதை பாகிஸ்தான் அணியின் அறிமுக வீரர் பாவாட் அலாமும் இலங்கை அணியின் நுவான் குலசேகரவும் இணைப்பாகப் பெற்றனர்.

இவ்வெற்றியின் மூலம் இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

இரு அணிகளுக்குமிடையிலான மூன் றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி எதிர் வரும் 20ஆம் திகதி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமாகிறது.




## பங்களாதேஷ் அணிக்கு வெளிநாட்டில் முதல் வெற்றி

மேற்கிந்தியத்தீவுகள்-பங்களாதேஷ் அணிகள் மோதிய முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கிங்ஸ்டவுனில் நடந்தது.

இதில் பங்களாதேஷ் முதல் இன்னிங் ஸில் 238 ஓட்டங்களையும் மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இன்னிங்ஸில் 307 ஓட் டங்களையும் எடுத்தன.

69 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2 ஆவது இன்னிங்ஸை விளையாடிய பங் களாதேஷ் 4ஆவது நாள் ஆட்டநேர முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 321 ஓட்டங்களை எடுத் திருந்தது.

நேற்று முன்தினம் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. தொடர்ந்து ஆடிய பங்களாதேஷ் அணி 345 ஓட்டங்களை எடுத்து சகல விக் கெட்டுக்களையும் இழந்தது. இதில் தமிம் இக்பால் 128 ஓட்டங்களையும் ஜீனைத்சித் திக் 78 ஓட்டங்களையும் எடுத்தனர். டரன் சமி 5 விக்கெட்டும் ரோச் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனால் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு 277 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக் கப்பட்டது. பங்களாதேஷ் வீரர்கள் மகம துல்லா, சகிப் அல்கசன் ஆகியோரின் அபார மான பந்துவீச்சால் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் விக்கெட்டுக்கள் மளமள வென்று சரிந்தன.

இறுதிநாளாட்டம் முடிய 40 நிமிடங்கள் இருந்த போது அந்த அணி 181 ஓட்டங்களில் சுருண்டது. இதனால் பங்களாதேஷ் அணி 95 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

பெர்னாட் அதிக பட்சமாக 52 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார். தனது முதல் டெஸ்டிலேயே பங்களாதேஷ் சுழற்பந்து வீச்சாளர் மகமதுல்லா முத்திரை பதித்தார். அவர் 51 ஓட்டங்கள் கொடுத்து 5 விக்கெட் டுக்களையும் சகீப் அல்ஹசன் 3 விக்கெட்டுக் களையும் கைப்பற்றினர்.

128 ஓட்டங்கள் குவித்த பங்களாதேஷின் தமிம் இக்பால் ஆட்டநாயகனாகத் தேர்வு பெற்றார். பங்களா தேஷ் அணி மேற்கிந்தி யத்தீவுகள் அணியை வீழ்த்தி வரலாற்று வெற்றியை பெற்றது.

## சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 95





டெஸ்ட் தொடரை தொடர்ந்து இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொட ரில் இலங்கை அணியுடன் விளை யாடியது.

இதில்முதலாவது ஒருநாள்போட்டி 1997 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17ஆம் திகதி கொழும்பு பிரே மதாஸ விளையாட்டரங்கில் நடை பெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத் தடுப்பை தீர்மானித்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 302 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 300 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இப் போட்டியில் முரளிதரன் 9 ஓவர்கள் பந்து வீசி 51 ஓட்டங்களை கொடுத்து விக்கெட் எதனையும் வீழ்த்தவில்லை.

இந் நிலையில் இரண்டாவது ஒரு நாள் போட்டி 1977ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20 ஆம் திகதி கொழும்பு பிரேமதாஸ விளையாட்டரங் கில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப் பை தெரிவு செய்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத் தாடிய இந்திய அணி 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 238 ஓட்டங் களை எடுத்தது. பாலா

இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 39 ஓட்டங்களை மாத் திரம் கொடுத்து அஸாருதின் (01), சௌரப் கங் குலி (113) ஆகியோரை வீழ்த்தி அசத்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 41.5 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 241 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை 2:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

இந்நிலையில் மூன்றாவதும் இறுதிய மான ஒருநாள் போட்டி 1997 ஆகஸ்ட் 24 ஆம் திகதி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத் தில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று இந்திய அணி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப் பெடுத் தாடிய இலங்கை அணி 49.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 264 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன் 4 பந்துகளில் (1 பவுண் டரி அடங்கலாக) 7 ஓட்டங்களை எடுத்து ஆட் டமிழந்தார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 255 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 9ஓட்டங்கள்வித்தியாசத்தில்தோல்வி அடைந்தது.

இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்து வீசி 41 ஓட்டங்கள் மாத்திரம் கொடுத்து ஆர்.பி. சிங்கை ஆட்டமிழப்பு செய்து இலங்கை அணி யின் வெற்றிக்க திருப்பு முனை அமைத்தார். இவ்வெற்றியின் மூலம் இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 3:0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியது.

இதன் மூலம் இந்திய அணி தோல்வி முகத்துடன் நாடுதிரும்பியது.

*(பயணிக்கும்)*

## யாழ்ப்பாண...

இதேவேளை மின்சாரப்பட்டியல்களுக்கான பணத்தை இன்றுமுதல் மின்சாரசபை அலுவலகத்திலும் செலுத்தமுடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரப்பட்டியல்களுக்கான பணம் இதுவரை காலமும் வங்கிகள் மற்றும் தபாலகங்களிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# திருமலை படுகொலைகள் தொடர்பான இறுதி விசாரணை அறிக்கை அரசிடம் சமர்ப்பிப்பு

(லண்டன்)

2006ம் ஆண்டு திருகோணமலையில் 5 மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் அவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் மூதூரில் எ.சி.எவ். என்ற பிரஞ்சு தொண்டு நிறுவன பணியாளர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆராய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு தனது இறுதி அறிக்கையை அரசாங் கத்திற்குச் சமர்ப்பித்துள்ளது.

எ.சி.எவ் தொண்டு நிறுவன படுகொலை தொடர்பாக குறிப்பிட்டுள்ள விசாரணைக்குழு கொல்லப்பட்ட பணியாளர்களின் குடும்பத்தினருக்கு இழப்பீடு தரவேண்டும் என்று கூறியுள்ள அதேவேளை இச்சம்பவத்தில் அரச படையினருக்கு பொறுப்பு இல்லை என்றும் கூறியுள்ளது.

இது தொடர்பாக இந்த விசாரணைக் குழுவின் தலைவரான ஓய்வுபெற்ற நீதிபதி உத்தல்லாகம பி.பி.சிக்கு கருத்துத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமக்கு முன்வைக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் சம்பவம் நடைபெற்ற அந்தத்தருணத்தில் அதாவது எ.சி.எவ் ஊழியர்கள் கொல்லப்பட்ட நேரத்தில் அங்கு படையினர் இருந்ததாக எந்தவொருசாட்சியும் எம்மிடம் கூறவில்லை. மேலும் சாட்சியங்களின் அடிப்படையில் மூதூர்ப் பகுதியில் விடுதலைப்புலிகள் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி நள்ளிரவு தாக்குதல் நடத்தத் தொடங்கினர். இரண்டாம் திகதியும் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தச்சமயத்தில் பொலிசார் அங்கு பலவீனமான நிலையில் இருந்ததால் அங்கிருந்து வெளியேறிவிட்டனர். ஏனெனில் பொலிசார் இருந்த வளாகத்தைத் தவிர நகரின் அனைத்துப் பகுதிகளும் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டன. பொலிசார் இருந்த இடம் நகருக்கு வெளியே இருந்தது. அந்த நிலையில் படையினரிடமிருந்து கூடுதல் துருப்புக்களை அனுப்புமாறு பொலிஸார் கூறியிருந்தனர். ஆனால் துருப்புக்கள் 4ஆம் திகதி தான் வந்து சேர்ந்தன. எனவே 4ஆம் திகதி மூதூர் நகரிற்குள் பொலிசாரோ அல்லது படையினரோ இருக்கவில்லை. இந்தச் சடலங்கள் 4ஆம் திகதி இரவு கண்டுபிடிக்கப்பட்டன. இதற்கு அடுத்தநாள் பரிசோதனை நடத்திய மருத்துவர்கள் எமக்கு அளித்த வாக்குமூலத்தில் தாம் சடலங்களைப் பார்த்த நேரத்திற்கு குறைந்தது 48 மணிநேரத்திற்கு முன்னர் கொல்லப் பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார். எனவே படையினர் இந்தக் கொலையைச் செய்யவில்லை என்று நாங்கள் கூறுவதற்கு ஒரு காரணம்.

அதேவேளை விடுதலைப்புலிகளின் இணையத்தளம் ஒன்று மூதூர் முழுவதும் தமது கட்டுப்பாட்டில் இருந்ததாக தெரிவித்திருந்தது. இவற்றை வைத்து இந்தக் கொலைகளை படையினர் செய்திருக்க முடியாது என்று நாங்கள் எண்ணினோம் என்றார்.

## இலங்கையில் சுனாமி அனர்த்...

கிரகணங்களால் ஏற்படக்கூடிய அசம்பாவித சம்பவங்கள் பற்றி எண் கணித ஜோதிடர் நம்புங்கள் நாராயணன் தெரிவிக்கையில்;

கிரகணம் ஆரம்பிக்கும் சமயத்தில் உள்ள நட்சத்திரம் மற்றும் ராசிக்கு ஏற்ப கிரகணத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் அமையும். 9 கிரகங்களும் 12 ராசிகளும் சுற்றி வருவதால் பலவித மாற்றங்களை ஒவ்வொருவரின் வாழ்க்கையில் காணலாம்.

எதிர்வரும் 22 ஆம் திகதி முழு சூரிய கிரகணம் ஏற்படுகிறது. டிசம்பர் 31 ஆம் திகதி பகுதி சந்திர கிரகணம் ஏற்படவுள்ளது. அடுத்த ஆண்டு (2010) ஜனவரி மாதம் 15 ஆம் திகதி பகுதி சூரிய கிரகணம் ஏற்படுகின்றது.

இது காலை 11.25 மணிக்கு ஆரம்பமாகி 3.15 மணிக்கு நிறைவடைகின்றது. இந்த கிரகணம் உத்தராடம் நட்சத்திரத்தில் தனு ராசியில் சம்பவிக்கிறது.

கிரகணங்கள் ஏற்படும் நேரம் நட்சத்திரம் ராசிக்கு ஏற்ப அதன் தாக்கம் 6 மாதத்திலிருந்து 3 ஆண்டுகள் வரை இருக்கும்.

இம் மாதம் 22 ஆம்திகதி முழுசூரிய கிரகணம் காலை 5.29 மணிக்கு ஆரம்பித்து 7.18 மணி வரையில் நீடிக்கும். கிரகணம் பூச நட்சத்திரத்தில் நிகழ்கிறது. இது உகந்த காலமாக அமையவில்லை.

எனவே பல்வேறு இயற்கை சீற்றத்தை எதிர் கொள்ளவேண்டியிருக்கும். சூரிய கிரகண காலத்தில் சந்திரன் பூமியில் உள்ள கிரகண பாதையில் பூமிக்கு அடியில் இருக்கும் டெட்டானிக் பிளேட்டின் ஆகர்ஷண சத்தியினால் பூகம்பம், சுனாமி பேரலை போன்ற இயற்கை சீற்றங்களை எதிர்கொள்ள வேண்டிய வாய்ப்பு இருக்கும் அரசியல் குழுப்பமும் நிகழலாம்.

மலேசியா, சிங்கப்பூர், மாலைதீவு, அவுஸ்ரேலியா,மொரிஷியஸ், இலங்கை ஆகிய நாடுகளிலும் சூரிய கிரகணத்தினால் இயற்கை சீற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

22 ஆம் திகதி நிகழவுள்ள சூரிய கிரகணத்தின் தாக்கம் குறித்து அமெரிக்காவிலுள்ள நாசா விண்வெளி ஆய்வுமையமும் அறிவித்துள்ளது. (ச-5)

## பிரபாகரனை...

போய்விட்டது என ஜனாதிபதி கூறியுள்ளார். ஒரு வேளை பிரபாகரனைச் சந்தித்திருந்தால் என்ன கேட்டிருப்பீர்கள் என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், பிரபாகரன் எதற்காக இப்படி நடந்து கொண்டீர்கள் என கேட்டிருந்திருப்பேன் என்று கூறியுள்ளார். (ச-5)

## மேஜர் ஜெனரல்...

சிகிச்சை பெற்று வருவதாக தேசிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவரது காலில் பலத்தகாயம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## 2 இலட்சம் மக்களுக்கு சிகிச்சை...

அறிவித்திருக்கும் அங்கு பணிபுரியும் மருத்துவர்கள், இதனால் மருத்துவர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதுடன், மருத்துவ சேவையையும் வழங்குவதில் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தக் கூடாரங்களில் வசிக்க முடியாத நிலை காணப்படுகிறது. இடம்பெயர்ந்த மக்களை மருத்துவர்கள் நாளாந்தம் காலை 7.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணிவரையில் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துகின்றனர்.

அவர்களுக்கு இரவில் நித்திரை செய்வதற்கு பொருத்தமான ஒரு இடம் அவசியம்.

மருத்துவர்கள் இரவுப் பணிகளையும் மேற்கொள்கின்றனர். இவ்வாறு இரவுக் கடமைகளை மேற்கொள்ளும்போது அங்கு அவர்கள் தனியாகவே இருக்கிறார்கள்.

தேவையானளவு மருத்துவ தாதியர்களோ அல்லது மருத் துவப்பணியாளர்களோ இருப்பதில்லை என வும் இவர்கள் தங்களுடைய முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட அரச மருத்துவ அதிகாரிகள் சங்க (GMOA) பேச்சாளர் உபுல் குணசேகர, முகாம்களில் உள்ள இரண்டரை இலட் சத்துக்கும் அதி கமான மக்களு க்கு சிகிச்சைய ளிப் பதற்காக 50 மருத்துவர்கள் மட்டு மே உள்ளனர்.

மருத்துவப் பணியாளர் களுக்கு பெரும் தட்டுப்பாடு காணப்படுவதால் இந்த மருத்து வர் களே மருத்துவத் தாதியர் களின்பணிகளையும் மேற்கொள்ளவேண்டிய நிலையில் உள்ளனர்எனத் தெரிவித்தார்.

மக்கள் பெருமளவுக்கு நெருக்கமாக உள்ள நிலைமையைச் சமாளிப்பதற்காக அரசு முகாம் களின் எண்ணிக் கையை அதிகரித்திருக்கின்றது எனச் சுட்டிக்காட்டிய உபுல் குணசேகர, இவ்வாறாணநிலையில்மருத்துவஅதிகாரி களின் எண்ணிக்கையையும் அதிகரித்திருக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார். (ச-5)

## புலிகளின் கிழக்குத் தளபதி...

தயாமோகன் உட்பட்ட குழுவினரே படையினருக்குச் சவாலாக இருந்து வந்தனர்.

இவர்களையும் சரணடையுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டபோதிலும், அதனை ஏற்க முடியாது என தயாமோகன் ஊடகப் பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

அதேவேளையில் சரணடைவதற்கு முற்பட்ட விடுதலைப்புலிகளைச் சேர்ந்த சுமார் 10 போராளிகள் அம்பாறையில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந் நிலையில் இவர்கள் தொடர்ந்தும் அம்பாறை மற்றும் அதனையடுத்துள்ள மொனறாகல காடுகளுக்குள் மறைந்திருப்பதாக கிடைத்த தகவல்களை அடுத்து படையினர் குறிப்பிட்ட காட்டுப் பகுதியில் தேடுதல் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தியிருந்தனர்.

அத்துடன் இவர்களின் நடமாட்டங்களை கண்காணிப்பதற்காக சிறப்பு அதிரடிப்படையின் இரண்டு முகாம்களும் அங்கு அமைக்கப்பட்டன.

இந் நிலையிலேயே இவர்கள் அம்பாறைக் காட்டுப் பகுதியில் இருந்து தப்பிச் சென்றிருப்பதாகவும், மலேசியாவுக்கு இவர்கள் சென்றிருப்பதாகவும் அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் சந்தேசியவுக்கு தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளையில் தமது ஆதரவாளர்களில் 600 பேர் இராணுவம் மற்றும் பொலிஸில் இணைந்து பயிற்சி பெற்று வருவதாகவும் முரளிதரன்மேலும் தெரிவித்தார். (ச-5)

## சந்திரிகாவை...

கொள்வதற்கான ஒருமுக்கிய உபாயமாக இந்தக் காய்நகர்த்தலை மங்கள சமரவீர மேற்கொண்டிருக்கிறார்.

2007ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் இவ்வாறான ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அப்போது சந்திரிகாவிற்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்புக்கள் வெளியானதையடுத்து அந்தமுயற்சி கைவிடப்பட்டது.

இருந்தபோதிலும் தற்போது புதிய அரசியற்கட்சி ஒன்றை தொடங்கியுள்ள மங்கள சமரவீர, மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக பாரிய எதிரணிகளின் முன்னணி ஒன்றை அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருப்பதால் சந்திரிகாவையும் தன்னுடன் இணைத்துக் கொள்வதற்கு முற்பட்டுள்ளார்.

இலங்கை அரசியலமைப்பின்படி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் ஒருமுறை அரச தலைவராக வருவதற்கான தேர்தலில் போட்டியிட முடியாது. ஆனால் அவர் நாடாளுமன்றத்திற்கு வருவதைத்தடைசெய்ய முடியாது. இதன்மூலம் அவர் பிரதமர் பதவியைப் பெறுவதற்கான வாய்ப்பும் உள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் உள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வாக்குவங்கியை உடைப்பதற்கு சந்திரிகாவை பயன்படுத்தலாம் என மங்கள சமரவீர திட்டமிடுகின்றார்.

இது தொடர்பாக உயர்மட்டத்தில் ஆலோசனைகள் நடைபெற்றுள்ளதாகவும் அதிகார பூர்வமாக விரைவில் அறிவிக்கப்படும் எனவும் மங்கள சமரவீரவிற்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)


சிவமயம்

யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசராசேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலயம்

வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்-2009

காலக்கிரியா விபரம்

விநாயகர் வழிபாடு, சாந்தி

14.07.2009 செவ்வாய்க்கிழமை-வாஸ்துசாந்தி,அங்குராப்பணம்

கொடியேற்றம்

15.07.2009 புதன்கிழமை முற்பகல் 10.00 மணி

இரதோற்சவம்

24.07.2009 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி

தீர்த்தோற்சவம்

25.07.2009 சனிக்கிழமை மு.ப. 10.00 மணி

பூர உற்சவம் நண்பகல் 12.00 மணி

அன்னாபிஷேகமும் அன்னதானமும்

26.07.2009 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணி

வைரவர் சாந்தி

27.07.2009 திங்கட்கிழமை பி.ப 5.00 மணி

மஹோற்சவ பிரதமகுரு:- சிவஸ்ரீ.ச.மகாலிங்கசிவக்குருக்கள்

ஆலய பிரதமகுரு:- சிவ ஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள்.

ஆலய பரிபாலன சபை

நாயன்மார்கட்டு ஸ்ரீஇராசராசேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலயம்.

(2953)



வலம்புரியின் 10 ஆவது ஆண்டு நிறைவையொட்டி

மிகவிரைவில்

இணையத் தளத்தில் உங்கள்

வலம்புரி

உலகெங்கும் உள்ள எங்கள் தமிழ் உறவுகள் தங்கள்

தாய்மண்ணின் தகவல்களை உடன் அறிய அரிய வாய்ப்பு

எதிர்பாருங்கள்... மிக விரைவில்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.07.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.